166

# இலங்கைச்சரித்திர — — வினா விடை.

C. Rasammah

# இலங்கைச் சரித்திர வினா விடை.

K. Sethuppillai
Mannar's tamil mixed
School
Teacher

காரைநகர்

திரு. க. சுப்பிரமணியம் அவர்கள்

எழுதியது.

யாழ்ப்பாணம்

ஸ்ரீ சண்முகநாதன் அச்சியந்திரசாலையில்,

பதிப்பிக்கப்பட்டது.

*Rights Reserved.*] **1936.** [விலை சதம் **25.**

உ

சரஸ்வதி துணை.

# இலங்கைச் சரித்திர வினு விடை

166

1. கற்காலம் என்றால் என்ன?

மானிடர், வெண்பரல், சிகிமுகிக்கல், சிப்பி என்பவற்றால் ஆயுதங்களைச் செய்து உபயோகித்த காலமாகும். இது புதிய கற்காலம் பழைய கற்காலம் என இரு பிரிவினை யுடைத்து. பழைய கற்காலத்தைக் காட்டிலும் புதிய கற்காலமே நாகரீக முடையது. ஏனெனில் இவ்வாயுதங்கள் இயற்கையோடும், காட்டு மிருகங்களோடும் போராடுதற்குப் பண்டைக் காலத்திய மானிடரால் உபயோகிக்கப்பட்டு வந்தன. வேடசாதியினரே இக்கல்லாயுதங்களை உபயோகித்திருக்க வேண்டும். ஆனால் எச்சாதியினர் திட்டமாக உபயோகித்தனர் என்று சொல்ல இயலாது.

2. வேடர் என்பவர் யார்??

இலங்கையும் இந்தியாவும் ஒன்றுபட்டிருந்த காலத்திலே, தென்னிந்தியாவிலிருந்து இலங்கைக்கு வந்தது போன்று, வேடர்கள் இத்தீவிற் குடியேறினர். இவர்கள் திராவிடர் காலத்திற்கு முன்னே சீவித்த இருளர், குறும்பர் என்பாரைச் சார்ந்தவரென்றும்; செலுபீசுத் தீவிலுள்ள தோவலர்களுக்கும், சுமாத்திராத் தீவிலுள்ள பாதினர்களுக்கும் உறவினரென்றும் சொல்லப்படுகின்றது. இவர்கள் உயரத்திற் கட்டையர்; சுருண்ட ரோம

மும் நீண்ட தலையும், நீண்ட முகமும், அகன்ற மூக்கும் அமைந்தவர்.

3. வேடரின் சீவியத்தை விபரி?

இலங்கையின் சில பகுதிகளில் வேடர் இப்போது இருந்து சீவியம் செய்வது போன்று, மானிட சீவியத்தின் முதலாம்படியான வேட்டையாடிச் சீவிக்கும் பருவத்திலிருந்தனர். இவர்கள் மாரிகாலத்திற் குகைகளிலும், கோடைகாலத்தில் ஆற்றங்கரைக் கண்மையிலும் குடியிருந்தனர். உணவுக்காக வில்லும் அம்புங் கொண்டு விலங்குகளை வேட்டையாடி வந்தனர். மரவுரிகளையும் இலைகளையும் ஆடைகளாக அணிந்து வந்தனர். கூட்டம் கூட்டமாகச் சீவித்து வந்தனர்.

4. எக்காரணத்தினுலே வேடர் வேறு துறைகளைப் பின்பற்றவில்லை?

வேட்டையாடியே சீவனஞ்செய்கிறபடியால் இவர்களுடைய சீவனம் சுக சீவனமே என்று கூறுதல் பொருந்தாது. பற்பல வேளைகளில் உணவு எவ்வாறு கிடைக்கும் என்பதும்: உயிருக் கேதேனும் ஆபத்து நேரிடுமோ என்பதும் கவலைக்கு இடமாயிருந்தது. காட்டு விலங்குகளின் சஞ்சாரத்துக் கேற்ப அவர்கள் இடமாறவேண்டியிருந்தது. வயிறு வளர்த்தற்கான தொழில்களைப் புரிவதினுலேயே, அவர்களுடைய நேரஞ் செலவழிந்தமையினுலே வாழ்க்கையின் வேறு துறைகளைப் பின்பற்றுதற்கான ஓழிவு நேரம் அவர்களுக்குக் கிட்டவேயில்லை.

5. வேடர் இலங்கைக்குப் புரிந்த தொண்டுகள் யாவை?

வேடர்கள் செய்த தொண்டு ஒன்றுமே யில்லையெனக் கூறலாம். ஆனுல் இலங்கைக்கு வந்த ஆரியர் தம்

மினத்துப் பெண்மக்களைப் போதிய தொகையினராக அழைத்துவர முடியாதபடியால் வேடப் பெண்மக்களை மணந்தனர். இதனுலேதான் இவர்கள் சிங்களச் சாதியினர் தோற்றுதற்கு உதவி புரிந்தனர்.

6. ஆரியர் என்பவர் யார்?

இந்தியாவிலிருந்து வேடர் இலங்கைக்கு வந்தது போன்று ஆரியரும் இவ்விடம் வந்தனர். ஆனுல் நாம் திட்டமாக இன்ன இடத்திலிருந்து வந்தார்கள் என்று கூற முடியாது. ஆசிரியர், ஆரியர், கி. மு. 500 ஆண்டளவில், இந்தியாவின் மேற்கிலிருந்தும் கிழக்கிலிருந்தும் புறப்பட்டுக் கரையோரமே சென்ற நாவாய்களின் மீதேறி இலங்கையை அடைந்து, நதிகளினூடே தீவின் உட்பிரதேசங்களை அடைந்த ஓர் சாதியாரெனக் கூறுகின்றனர்.

7. ஆரியர் இந்தியாவின் எப்பகுதியில் வசித்தனர்?

ஆரியர் இந்தியாவின் மேல் கீழ்ப் பாகங்களிலிருந்து இலங்கைக்கு வந்தனர். முன்னே இவர்கள் வடமேற்குப் பகுதியிலிருந்து புறப்பட்டு கீழ்த்திசையும் தென் திசையும் சென்றனர். மகாநதி, கிருஷ்ணு, கோதாவாரி, தாம்பரபர்ணி போன்ற பெருநதிகளுக்கு இவர்களிட்ட பெயர்களே தெற்கே குடியேறியதற்கும் போதிய சான்றுகளா யிருக்கின்றன. ஆகையினுலே இவர்கள் இந்தியாவின் பெரும்பாலான பகுதிகளிலும் வசித்தனரென்று கூறலாம்.

8. ஆரியரின் சீவியமுறை யாது?

கல்லாயுதங்களை உபயோகித்து வந்த வேடரை இலங்கையில் வந்த ஆரியர் சிரமமின்றி தமது இருப்பாயுதங்களைக் கொண்டு யோட்டியிருக்க வேண்டும். இரும்பை

உபயோகிக்க அறிந்த ஆரியரோடு வேடர் போரிட்டிருக்க மாட்டாராயினர். ஆரியர் கிருஷித் தொழிலை முக்கிய முயற்சியாகக்கொண்டு ஓரிடத்திலிருந்து வாழ்க்கை நடாத்தினர். தமக்கு வேண்டிய ஆகாரத்தைப் பெற்றதினலே சிறிதளவுக்குச் சுகமாகச் சீவித்தனர். கிருஷித் தொழிலைப் பின்பற்றுவதால் ஏற்பட்ட ஓய்வுநேரம் அவர்கள் ஒருவரோடு ஒருவர் அளவளாவிச் சமுதாய வாழ்க்கையை நடத்தவும் அறிவை வளர்க்கவும் உதவியாயது. நேரம் கிடைத்தமையினலே அவர்கள் கடவுளைப் பற்றித் தியானிக்கவும், ஒரு சமயத்தைப் பின்பற்றவும் முடிந்தது.

9. மகாவம்சத்தின் கூற்று யாது?

இலங்கையிலே வாழ்ந்த பண்டைக்கால மக்கள் தாம் பூசித்த மிருகங்களினதும் பறவைகளினதும் பெயரையே தம் குலப் பெயராகக் கொண்டனர். இப்படியாக வாழ்ந்த சிறு கூட்டத்தினர் பலருடைய பெயர்களை மகாவம்சம் கூறுகின்றது. அவையாவன:—சிங்களர் (சிங்கம்) தாச்சர் (கடுவாய்) இலம்பகர்ணர் (முயல் அல்லது ஆடு) பலிபோசகர் (பசு) மோரியர் (மயில்) குலிங்கர் (ஒரு வகைப் பறவை) என்பனவாம். இவர்களுள் சிங்களச் சாதியினரே பெருஞ் செல்வாக்கு உடையவராக இருந்தனர்.

10. இலங்கையின் முன்னேற்றத்திற்கு ஆரியர் எங்ஙனம் உதவி புரிந்தனர்?

(i) ஆரியர் இலங்கையில் முதன் முதல் இரும்பாயுதங்களை யுபயோகித்தனர்,

(ii) சிங்கள சாதியினரை விருத்தியடையச் செய்தனர்.

(iii) கிருஷிகத்தை விருத்தி செய்தனர். இதன் மூல

மாகவே குளங்களை அகழ்ந்தனர். நாட்டைச் சிறப்புடன் விளங்கச் செய்தனர்.

(iv) புத்த சமயத்தைப் பரப்பினர். சமயத்தை மேன்னிலைக்குக் கொண்டுவர விகாரைகளையும் டாகபக்களையும் கட்ட ஏதுவாயிருந்தனர். கி. மு. 1000 ஆண்டளவிலே இந்தியாவிலும் கி. மு. 500 ல் இலங்கையிலும் இவர்கள் குடியேறினர்.

11. சிறு குறிப்பெழுதுக — (1) பண்டார முறை (2) ரிக்வேதம். (3) உவில்லியம் யோன்சு. (4) பிராம்மி.

பண்டாரமுறை:- வேடர் தாம் நோயினுற் பீடிக்கப்பட்டபோது பிதுருக்களுக்குப் பலியிட்டனர். அதைப் போன்று காலஞ்சென்ற பிரதானத் தலைமைக்காரருக்கும், சிற்றரசர்களுக்கும் நிவேதனங்கள் அளிப்பதைப் பண்டார முறை என்பர்.

ரிக்வேதம்:- ஆரியருடைய மிகப் புராதன கவிகளின் தொகுதியே ரிக்வேதம் எனப்படும். இது அவர்கள் சிந்துநதியின் பள்ளத்தாக்கிலே வாசம்செய்தபோது அவர்கள் பின்பற்றிய சீவியம், பழக்க வழக்கங்கள் என்பனவற்றை ஒரு சிறிது தெரிவிக்கின்றது. குடும்பத்து மூத்தோருக்கு அடங்கி நடப்பதையும் சமுதாய முறை, யையும், அரசியல் முறையையும் அடிப்படையாக வுடையது.

உவில்லியம் யோன்ஸ்:- இவர் சமஸ்கிருதம், பாரசீகம், கிரீக்கு, லத்தீன், செல்திக்கு, கோதிக்கு என்ற பலபட்ட பாஷைகளெல்லாம் ஒரே தாய்மொழியிலிருந்து பிறந்தனவென்றும்; இம்மொழிக்குத் தாய் மொழியாயுள்ளது இந்திய-ஐரோப்பிய மொழியென்றும் கூறினர்.

பிராம்மி:- திராவிட மொழியின் ஓர் திசைமொழியானது பிராம்மி எனப்படும். இது திராவிடரும் ஆரியரைப் போன்று வடமேற்கிலிருந்தே இந்தியாவினுட் புகுந்தனரெனக் கூறுகின்றது. தமிழுள்பட தற்காலத்திலே இந்தியாவிலே வழங்கும் வரிவடிவங்களுக்கெல்லாம் மூல எழுத்தாயிருப்பது பிராம்மியே. பினீசிய வரிவடிவமும், பிராம்மி வரி வடிவமும் ஒத்திருக்கின்றன.

## 12. திராவிடர் யார்?

ஆரியர் என்பதைப்போன்று திராவிடர் என்ற சொல்லும் தனிப்பட்ட சாதியாரைக் குறியாது, தமிழ், கன்னடம், மலையாளம், தெலுங்கு என்னும் திராவிட மொழியைப் பேசுவோரைக் குறிக்கும். வேடரையும் ஆரியரையும் தவிர இன்னோர் சாதியார் இலங்கையை அடைந்தனர். அவர்கள் திராவிடராவர். அவர்கள் அதிகமாக இலங்கையின் கரையோரங்களிலே சீவித்தனர். இதனாலேதான் அவர்கள் கரையோரச் சிங்களர் தோன்ற உதவினர். படையெழுச்சிக் காரர்களாகவும், குடியேற்றக் காரர்களாகவும் இலங்கையை அடைந்தனர். 14-ம் நூற்றாண்டிலே இவர்கள் உன்னத நிலை அடைந்தனர். யாழ்ப்பாணத்து அரசரிடமிருந்து திறையும் பெற்றனர். இவர்கள் இந்துசமயத்தை இலங்கையில் வேரூன்றச் செய்தனர்.

## 13. பௌத்தசமயம் எப்படி இலங்கைக்கு வந்தது?

தற்காலத்திய பாட்னு நகரத்திற்கும் புத்தகாயாப் பட்டினத்திற்கும் நடுவே, ராஜகிருகம் என்பதைத் தலைநகராய்க் கொண்ட மகதேசத்திலே முதன் முதலாகப் புத்தசமயம் தோன்றியது. பின் அவந்தி நாட்டிலும்,

காஞ்சிபீரத்திலும் இச்சமயம் வேரூன்றியது, இப்படியாக இச்சமயத்தை ஏக சக்கராதிபத்தியம் செலுத்திய அசோகன் தழுவினன். ஆகையினுலே இவன் தான் வாணிபம் நடாத்திய தேசங்களுக்கும், அயல்நாடுகளுக்கும் பிரசாரகர்களை அனுப்பினன். இப்படியே தேரவாதினிக் கொள்கையைப் பின்பற்றிய பிக்குக்கள் சிலர் மகேந்திரன் (மிகிந்தன்) தலைமையிலே இலங்கையையடைந்தனர். அப்போது அனுராதபுரத்தில் ஆட்சிசெய்த தேவனம்பியதிஸ்ஸன் அவர்களை நல்வரவேற்ருன்.

14. பௌத்த சமயத்தின் பிரிவுகள் யாவை?

பௌத்த சமயம் விருத்தியடைந்தபொழுது அதன் கொள்கைகளினு லேற்பட்ட அபிப்பிராய பேதத்தினுலே பல பிரிவுகள் தோன்றின. அவையாவன; மகாசங்கிசர்கள், தேரவாதினிகள், சருவஸ்வாதினிகள், மகிஷாசகர்கள் என்பன. இவற்றுள் தேரவாதினிகளே இலங்கைக்கு வந்தனர். இதைவிட தேரவாதினிகள் அவந்தி நாட்டிலும் கோசாம்பியிலும் தம் சமயத்தைப் பரவினர்.

15. சிறு குறிப்பெழுதுக:— (1) வருணன். (2) அஷ்டசீலம். (3) போதிசத்துவர். (4) திரிபீடம். (5) ஜாதகம். (6) செமிதிக். (7) பிராமணங்கள்.

வருணன்:—வானமண்டலத்துக்குரிய தேவதையை ஆரியர் வருணன் என அழைத்தனர். இத்தேவதை தருமம் எது அதர்மம் எது என்பதையும் சீவியத்தையும், பருவகாலங்கள் நிகழ்வதையும் கவனித்து வருவதாக நம்பினர்.

அஷ்டசீலம்:—புத்தர் துன்பம் உண்மையானதென்றும் அது விருப்பத்தினுலே உண்டாவதென்றும் எண் மார்க்கங்களைப் பின்பற்றுவதினுலே நீக்கக்கூடியனவென்

றும் கூறினர். அஷ்டசீலங்களாவன:—நற்கொள்கை, நற்சிந்தனை, நற்பேச்சு, நற்கருமம், நற்பிழைப்பு, நன்முயற்சி, நன்மனம், நற்கவனம் முதலியன.

போதிசத்துவர்:—தமது நிருவாண நிலை துறந்து, பிறர்பொருட்டுத் தியாகம் செய்தமையினலே புத்தராகும் தன்மையுடையர்.

திரிபீடகம்:—பாளிமொழியில் எழுதப்பட்ட தருமநூல் 'திரிபீடகம்' என்றழைக்கப்படும். இது மூன்று பிரிவினைகளை யுடைத்து. (i) விநயம்—பிக்குகளின் ஒழுக்கமுறை நூல். (ii) தருமம் அல்லது சூத்திரம்—புத்தரும் அவர்களது சீடர்களு மருளிய உபதேசங்கள். (iii) அபிதர்மம்—பௌத்த சித்தாந்தம். இன்னமும் திரிபீடகம் பல பிரிவினைகளை யுடையது. இவற்றுள் சில செய்யுள்நடையிலும் சில வசனநடையிலும் எழுதப்பட்டிருக்கின்றன.

ஜாதகம்:—இது புத்தரின் பூர்வ ஜென்மங்களையும் அப்போது நடந்த சம்பவங்களையும் கூறுகின்றது. இந் நூலும் இதன் உரையும் பிரசித்தி பெற்றவை. இதற்கு முகவுரையாயுள்ளது புத்த வம்சத்தின் பிரிவேயாம். இது சிங்களராலே பெரிதும் போற்றப்படுகின்றது. ஜாதகம் கூறிய விஷயங்களையே சிங்களக் காப்பியங்கள் கூறுகின்றன.

செமிதிக்—சிங்கள வரிவடிவம் தற்காலத்து ஐரோப்பிய மொழிகளின் வரிவடிவம் போன்று 'செமிதிக்' மொழியிலிருந்து உண்டானது. அன்றேல் 'செமிதிக்' வரிவடிவம் தோன்றிய இன்னேர் மூலவரிவடிவத்திலிருந்து தோன்றியது.

பிராமணங்கள்:—ரிக் வேதத்திற்குப் பின் றேன்றிய இலக்கிய நூல்களாவன, பிராமணங்கள், வேத வியாக்கி

யானங்கள். இவை ஆரியரின் வாழ்க்கை முறையை நமக்குத் தெரிவிக்கின்றன.

16. பௌத்த சமயத்தால் ஏற்பட்ட நன்மைகள் எவை?

(i) மிருகத்தன்மை வாய்ந்திருந்த மானிடரை பௌத்த சமயம் வழிகாட்டியாக நின்று மக்களை நாகரீகம் அடையச் செய்தது.

(ii) இந்தியாவுக்கும் இலங்கைக்கும் தொடர்பை உண்டாக்கியது. இந்திய சமுதாய நாகரீக முன்னேற்ற வாழ்க்கைக்கான விஷயங்களினால் இலங்கையினரை பெரும் பயனடையச் செய்தது.

(iii) இலங்கையில் செங்கல், கல் என்பவற்றால் கட்டடங்களையும், சிற்ப உருவங்களையும் தோன்றச் செய்தது. டாகபக்களுக்கும் விகாரைகளுக்கும் அடிகோலி நின்றது.

17. பண்டைக்காலப் பகுதியென்பது எது?

(கி. மு. 274—237) அசோக மன்னனுடைய காலத்திலே சீவித்த தேவனம்பியதிஸ்ஸன் காலமுதல் மகாசேனனுடைய ஆட்சிமுடியும் வரையிலே நடந்த சம்பவங்களைக் கூறும் பகுதியாம்.

18. சனங்கள் பூர்வ காலத்தில் எவ்வெவ்விடங்களிற் குடியேறினர்.

இக்காலத்தில் சனங்கள் மூன்றிடங்களில் குடியேறினர். முக்கியமான பிரதேசம் அனுராதபுரத்தைத் தலை

நகராகக்கொண்ட வட சமவெளியாயிருந்தது இரண்டாவது மாகமாவைத் தலைநகராகக்கொண்ட உருகுணைப் பிரதேசமாகும். மூன்றாவது களனியாவைத் தலைநகராகக்கொண்ட களனிப் பிரதேசமாகும். இம்மூன்றிலும் சனங்கள் சம்பந்தமின்றி குடியேறினர்.

19. அநுராதபுரம் ஏன் தலைநகராக்கப்பட்டது?

அனுராதபுரத்தைத் தலைநகராய்க்கொண்ட வட பிரதேசமே இலங்கையில் சிறந்து விளங்கியது. இது மல்வது ஓயா என்னும் ஏரிக்கரையி லிருந்தமையாலும், தென்னிந்தியாவிலிருந்து வந்த படையெழுச்சியாளர் மன்னருக்கருகில் உள்ள மாதோட்டத்தில் இறங்கி ஏரிக்கரை வழியாக நாட்டினுட்பிரதேசங்களை அடைய முக்கியமான ஓரிடத்திலிருந்தமையாலும் அதுவே தலைநகராக விளங்கியது. அதுவுமன்றி அனுராதபுரம் நெல் விளைவித்தற்குத் தகுந்த இடமாயிருந்த படியாலும், இலங்கையின் மத்திய பகுதியிலிருந்தபடியாலும் இது இலங்கையின் தலைநகராக்கப்பட்டது.

20. களனிப் பிரதேசத்தில் ஏன் சனங்கள் குடியேறவில்லை?

கனமழை பொழியப்பெறும் பிரதேசமாயிருந்தமையாலும் அடர்ந்தவனமாயிருந்தமையாலும் வடதென் மேற்குத் திசையிலிருந்து உட்புகுதற்குக் கஷ்டமாயிருந்தமையினாலும் சனங்கள் இங்கே குடியேறவில்லை. இங்கு ஓடும் நதிகள் கீழ்த்திசையிலிருந்து மேற்றிசை ஓடுவதினாலே அவை பிரயாணம் செய்யப் பயன்படா தொழிந்தன. அதிகமான இடங்கள் மலைப் பிரதேசமாயிருந்தபடியால் நெல்விளைவித்தற்குத் தகமையற்றதாயிருந்தது. இதனாலும் சனங்கள் இப்பிரதேசத்தில் குடியேறவில்லை.

21. பூர்வத்தில் இலங்கையிலிருந்த 3 வழிகள் எவை?

(1) அனுராதபுரத்திலிருந்து கஹகலே, கிதிகலே வழி யாக மாகன் தோட்டத்திற்கும்.

(2) மாகன் தோட்டத்திலிருந்து மகாவலிகங்கையி னூரமே மகியங்கனுவுக்கும்.

(3) மகியங்கனுவிலிருந்து மாணிக்ககங்கையி னோ மே புத்தளைக்கும் செல்வனவாம்.

22 எல்லாளன் யார்?

சிங்கள அரசர்களைத் தவிர தமிழரசர்களும் அனு ராதபுரத்தில் இருந்து ஆட்சி புரிந்தனர். இவர்களுள் இவ னும் ஒருவனும். இவன் இலங்கையின் வடபகுதியை முதன்முதல் ஆளுகை செய்தான். பின இவன் இலங் கை முழுவதையும் ஆண்டான். இவனேயும் இவனுக்குக் கீழிருந்த குறுநில மன்னரையும் துட்டகெமுனு தோற்க டித்து இலங்கையின் வட தென் கீழ்ப்பகுதிகளுக்கு அரச ஞனன்.

23. கால வரிசையில் நிரைப்படுத்துக:

(1) சங்கத்திஸ்ஸன். (2) சுபன். (3) சத்தாதிஸ் ஸன். (4) வசபன்.

(1) சத்தாதிஸ்ஸன்

(2) சுபன்

(3) வசபன்.

(4) சங்கத்திஸ்ஸன்.

24. பண்டைக்கால அரசியல் முறையைவிபரி

அக்கால அரசியல் முறை ஓர்வகையான மானிய முறையைத் தழுவியிருந்தது. ஏரிநீரை பாசனத்துக்கு உபயோகிக்கப்பட்ட வரி நீங்கலாக அரசன் குடிகளிட

மிருந்து பயிர்ச்செய்கையினும் ஒரு பகுதியைப் பெற்றான். இதற்குப் பதிலாக இவன் அந்நியரினின்றும் குடிகளைக் காப்பாற்றி வந்தானே தவிர அவர்களுக்கு வேறொரு உதவியும் செய்யவில்லை. ஆனால் நாகரீகநிலை மேம்படுதற்கு இவன் விகாரைகளைக் கட்டியும் பிக்குகளுக்கு உணவளித்தும் வந்தான். அரசன் தமக்குக் கீழுள்ள உத்தியோகஸ்தருக்கும் ஒரு பகுதியை ஈந்தான். முற்காலத்தில் யாவரும் வறுமைவாய்ப்பட்டவர்களாகவே யிருந்தனர். ஆனால் இக்காலத்தில் அரசர்களும் சிற்றரசர்களும் செல்வநிதி படைத்தவர்களாய்க் கைத்தொழில், கல்வி முதலியவற்றை விருத்தி செய்பவர்களா யிருந்தனர். அரசர் படைகளை வகுத்தனர். ஏரிகளையும் குளங்களையும் வெட்டினர். டாகபக்களையும் விகாரைகளையும் கட்டினர். இப்படியாகக் குடிகளின் நன்மைக்கான இன்னோரன்ன செயல்களையும் புரிந்தனர்.

25. எப்படி குளங்க ளுண்டாக்கப்பட்டன?

இந்தியாவிலே பூமியை அகழ்வதால் ஏற்பட்ட ஏரிகளிலே நீர் சேகரிக்கப்பட்டது. இலங்கையில் ஏரிகள் ஆழமற்ற பள்ளத்தாக்குகளிலே இரு குன்றுகளுக்கிடையில் ஓர் அணையைக் கட்டுவதாலானவை. பின் மேடான நிலத்திலிருந்து வரும் சிற்றாறுகள் மாரிகாலத்தில நீரைச் சேர்த்தன. பின் ஏரியிலிருக்கும் நீர் வெட்டுவாய்க்கால் வழியாகப் பாச்சப்பட்டது. இவ்வாய்க்கால்கள் வயல்களுக்கு நீரை உதவியதோடு, ஏரிகளுக்கும் நீரைக் கொண்டு சேர்ந்தன. இதனாலே போக்குவரவும் நடைபெற்றதோடு குளமும் விரிவடைந்து வந்தது.

26 பிரதான இரு குளங்களை விபரி?

மின்னேரியாவும், கந்தளாயும் மிகவும் பிரசித்திபெற்றவை. மின்னேரியா எல்லாவற்றிலும் பெரிது. இது

4560 ஏக்கர் பரப்பை யுடையது. இதன் கரை 40 அடி முதல் 50 அடி வரையும் உயரமுடையது. இது மகா சேனனுல் கட்டப்பட்டது. இவ்வேரியினுல் பயனடைந்தோர் அனேகர், இவர்கள் மகாசேனனை ஓர் தெய்வப் பிறப்பெனக் கருதி வணங்கினர்.

கந்தளாய் 2-ம் அக்போவினுல் கட்டப்பட்டது. இது 1 மைல் 890 அடி நீளமுடையது. இதன் கரை 54 அடி முதல் 59 அடி வரையும் உயரமானது. இதன் பரப்பு 3500 ஏக்கர்.

27. பௌத்த சமயத்தில் ஏன் பிரிவுகள் ஏற்பட்டன? யாவை?

சில ஒழுங்கு முறைகளைப் பற்றித் தர்மருசியினரும் சாகலிகரும் தேரவாதினிகளோடு மாறுபட்டமையினுலும் இந்தியாவிலிருந்து பிக்குகள் மேன்மேலும் வந்ததினுலும் பௌத்த சமயத்திலே பிரிவுகள் ஏற்பட்டன. வலகம்பாகுவின் காலத்திலே தர்மருசியர் என்னும் பிரிவும், கோதாபயன் காலத்தில் சாகலிகர் என்னும் பிரிவும் ஏற்பட்டன. தர்மருசியர் அபயகிரி விகாரையிலும், சாகலிகர் தட்சிண விகாரையிலும் தங்கினர்.

28. சிறு குறிப்பெழுதுக:—(i) நிகந்தர். (ii) ஆஜிவிகர். (iii) சேதியங்கள். (iv) அமராவதி.

நிகந்தர்:—பௌத்த சமயம் மாத்திரமின்றி வேறுசமயங்களும் இலங்கைத் தீவிற் காணப்பட்டன. அவற்றுள் நிகந்தரும் ஒன்று, நிகந்தர் சமண சமயத்தவர். இவர்கள் மகா வீரர் என்னும் சமயாசாரியின் கொள்கையைப் பின்பற்றியவர்.

ஆஜிவிகர்:—இவர்களும் இதேகாலத்தில் வசித்தவர், இவர்கள் மக்கலிகோசலர் என்பவரின் உபதேசங்களைப் பின்பற்றியவர்.

சேதியங்கள்:—தூபிகள், சேதியங்கள் என்பன ஒரு பொருளையே கருதுகின்றன. இவை பலவித வடிவங் கொண்ட டாகபக்கள் சில செற்குவியல் வடிவமுங், சில அரைகோள வடிவமும் கொண்டு நிருமாணிக்கப்பட்டன.

அமராவதி:—இந்தியாவிருந்தே சிற்பம் மனக்கலை என்பன இங்கு வரப்பட்டன. அதிகமானவை அமராவதி என்னுமிடத்திற் காணப்படுகின்ற சிற்ப உருவங்களையே தழுவியுள்ளன. இங்கு வசித்தவர் ஆந்திரர்.

29. ஆந்திரர் யார்? அவரைப்பற்றி யாது அறிவாய்?

அசோக மன்னனு காலத்திலே ஆந்திரர் தெலுங்காணம் என்ற இடத்தில் வசித்த சாதியார். இவர்கள் மேலோங்கி தமது இராச்சியத்தை விசாலமடையச்செய்தனர். கி. மு. 2—3 நூற்றுண்டிலே உச்சயினியையும் விதிசாவையையும் தமதாக்கிக்கொண்டனர். முதலில் ஆந்திரர் தாணியகடகமென்னும் அமராவதிப் பட்டினத்தைத் தலைநகராக்கினர். பின் பிரதிஷ்டானு மத்திய இடத்தில் இருந்தமையால் தம் தலைநகரை பிரதிஷ்டானுவுக்கு மாற்றினர். இவர்கள் பௌத்த சமயிகள். பௌத்த சமயத்தைப் பல வழியாலும் ஓங்கச் செய்தனர். இதைப் பற்றிய சிற்பங்கள் சாஞ்சி, அமராவதி, நாகர்ச்சுனகொண்டா, கார்லே, அஜந்தா, நாசிக் முதலிய இடங்களில் காணப்படுகின்றன.

30. இலங்கையின் மறு நாமங்கள் யாவை?

(i) சிலோன்
(ii) லங்கா
(iii) ஈழம்
(iv) செரந்திபு
(v) சிங்களத்துவீபம்
(vi) தாமிரத்துவீபம்
(vii) நாகத்துவீபம்
(viii) பலேசிமுண்டு
(ix) தாப்பிரோபேன்
(x) சாலேசு
(xi) தாம்பிரபர்ணி

முதலியன இலங்கையின் மறு நாமங்களாகும்.

31. பின் கூறப்பெற்ற ஆறு பெயர்களும் யாரால் இடப் பெற்றன?

தாமிரத்துவீபம்:—திவ்வியாவதானம் என்ற சமஸ்கிருத நூலில் கூறப்பட்டுள்ளது.

தாம்பிரபர்ணி:—ஜாதகம் என்ற புத்த நூலிற் கூறப் பட்டுள்ளது.

நாகத்துவீபம்:—இராமாயணமென்ற நூலிற் கூறப் பட்டுள்ளது.

பலேசிமுண்டு:—பெரிப்புளுசு என்ற நூலிற் காணப் படுகின்றது.

சாலேசு:—2-ம் நூற்றாண்டிலே சீவித்த டோலமி என் பான் இட்டுக்கொண்டான்.

தாப்பிரோபேன்:—கிரேக்க நூலாசிரியரொருவர் கூறியது.

32. கிரேக்கர் நடத்திய வாணிபத்தை விபரி?

வாணிபத்தில் தென்னிந்தியாவே பெருங்கீர்த்திபெற்றிருந்தது. முதன்முதல் வியாபாரத்தி லீடுபட்டு தென்னிந்தியாவை நாடியவர் அராபியரே. பின் அவ் வியாபா

ரத்தைக் கைப்பற்றியவர் கிரேக்கரே. இவர்கள் ஏடின் குடாவிலிருந்து புறப்பட்டுக் கடல்வழியாக இந்தியாவை அடைந்தனர். இவர்கள் வாசனைச் சரக்கு, வஸ்திரம், முத்து, வைரம், முதலியவற்றை ஏற்றுமதியாக்கினர். இலங்கையின் விளைபொருட்கள் விற்றற்பொருட்டு இந்தியாவுக்குக் கொண்டுபோகப்பட்டன. இரண்டாம் நூற்றாண்டுதொடக்கம் கிரேக்கர் இலங்கைக்கு நேரே வந்து பொருட்களை ஏற்றுமதியாக்கினர்.

33. மத்திய காலமென்பது எது?

(362—1017) கீர்த்திஸ்ரீமேகவர்ணன் காலமுதல் 5-ம் மிகுந்துவின் காலத்திலே சோழர் இலங்கையை வென்றதோடு முடிகின்றது.

34. மத்திய காலத்தில், இலங்கையின் பிரிவுகள் யாவை

முன்கூறிய மூன்று பிரதேசமும் தனிப் பெயர்களைப் பெற்றனவே தவிர புதிதான பிரிவுகள் ஏற்படவில்லை. அனுராதபுரத்தைத் தலைநகராகக்கொண்ட வடபகுதி, ராஜரட்டையென்றும், இதற்குத் தெற்கே யிருந்த பிரதேசம் தட்சிண தேசமென்றும்; தென்கீழ்ப் பிரதேசம் உருகுணை யென்றும்; நடுவிலிருந்த பிரதேசம் மலயநாடென்றும் பெயர் பெற்றன. வட பிரதேசம், உத்தரதேசம், பச்சிமதேசம், பிராசீனதேசம் என்ற பிரிவுகளுடையதாயிருந்தது. இவைகள் யாவும் அனுராதபுரத்தரசரின் கீழிருந்தன.

35. சிறுகுறிப்பெழுதுக:- (1) நுவரலட்டன் (2) சிம்மகிரி (3) மகாதிபாதன், (4) கிராமசுயராச்சியம் (5) தலதாமாளிகை.

நுவரலட்டன்:—அனுராதபுரம் தலைநகராயும், அரசனின் இருப்பிடமாயும், வியாபாரத்துக்கேற்ற இடமாயு

மிருந்தபடியால் நகரத்தை மேற்பார்வையிட நுவரலட்டன் என்னும் தனிப்பட்ட உத்தியோகஸ்தன் நியமிக்கப்பட்டிருந்தான்.

சிம்மகிரி:-இது ஒரு மலைக்கோட்டையாகும். 1-ம் காசியப்பனால் இது தலைநகராக்கப்பட்டது.

மகாதிபாதன்:-அரசனுக்கு அடுத்தவன் இளவரசன் அல்லது யுவராசனாவான். இவனே பட்டத்துக்குரியவன். இதனாலே இவனுக்கு இது பட்டப் பெயராயிற்று. வடபிரதேசம் மகாதிபாதனிடம் ஒப்புவிக்கப்பட்டபடியால் மாயரட்டை என்னும் காரணப்பெயர் பெற்றது.

கிராமசுயராச்சியம்:-ஒவ்வொரு கிராமத்தவனும் அன்னியர் இடர்ப்பாடின்றி தாமாகவே கவனித்து வந்தனர். அரசாங்கத்தார் திறைப்பணம் வாங்க அவ்விடம் சென்றனரே தவிர, கிராம விஷயங்களைக் கவனிக்கவேயில்லை. இதனாலே ஒவ்வொரு கிராமமும் சுயராச்சியம் பெற்றிருந்தது.

தலதாமாளிகை:-தலதா என்பது புத்தனுடைய பல்லாகும். இது இந்தியாவிலிருந்து கொண்டு வரப்பட்டது. தலதாவைப் பாதுகாக்கும் மாளிகை தலதா மாளிகையாகும். இது அரசனது விருப்பப்படியே ஒவ்வொரு தலைநகருக்கும் எடுத்து மாற்றி மாற்றி வைக்கப்பட்டது.

36. 1-ம் காசியப்பன் ஏன் சிம்மகிரியைத் தலைநகராக்கினான்?

இவன் தன் தகப்பனைக் கொன்று முடி சூடினான். இதைக் கண்ணுற்ற இவனுடைய தம்பி இந்தியாவுக்கு ஓடினான். காசியப்பன் இதற்குப் பயந்ததுமின்றி, குடிகளும் தம்மை வெறுத்து சிங்காசனத்தினின்றும் நீக்குவர் எனவும் பயந்திருந்தான். இக்காரணங்களினாலே அவன்

அனுராதபுரத்தை விட்டு சிம்மகிரி அல்லது சிக்கிரியாவைத் தலைநகராக்கினான். சிம்மகிரியில் அநேக சூழ்ச்சிப்பாதைகளை யுண்டாக்கினான். இதனாலேதான் இவன் சிறப்புற்றிருந்தான்.

37. அனுராதபுரத்தைப்பற்றி யாது அறிவாய்?

அனுராதபுரம் ஏனைய நகரங்களோடு ஒப்பிடின் பல வீதிகளையும், சந்துக்களையும் உடையதாயும், பல கோயில்களையும் க்ஷேத்திரங்களையுடையதாயு மிருந்தது. நகரத்தினுள்ளும் புறமும் கமத்தொழிலுக்கு வேண்டிய நீர் சேகரிக்கப்பட்டிருந்தது. கமத்தொழிலினால்உண்டாய விளைவே மாந்தரின் உணவுக்கு உபயோகப்பட்டது. அனுராதபுரம் அரசனின் தலைநகராயும், வியாபாரத்துக் கேற்ற ஸ்தலமாயுமிருந்தது. இங்கே பிறநாட்டு வணிகர் தங்கலாயினர். 1-ம் காசியப்பன் காலம் நீங்கலாக அனுராதபுரமே தலைநகராக இருந்தது.

38. அரசனின் முக்கிய உத்தியோகஸ்தர்கள் யார்?

அரசனுக்கு உதவியாகப்பல உத்தியோகஸ்தர்களிருந்தனர். சேனாதிபதித்தானம் அரசனால்நம்பப்பட்டவனுக்கே அளிக்கப்பட்டது. எனவே அரச குடும்பத்தவனே இப்பதவிக்கு நியமிக்கப்பட்டான்.

(1) சத்தக்காககன்:-குடை தூக்குபவன்.

(2) அசிக்காககன் -வாள் தூக்குபவன்.

(3) மகாலேககன்.-முக்கிய எழுத்துக்காரன் என்பவர்களே அரசனின் முக்கிய உஸ்தியோகஸ்தர்.

39. அரசன் முக்கிய கடமைகள் யாவை?

போக்கு வரவுக்கான சாதனங்களில்லாமையினாலே தலைநகருக்கு வெளியேயுள்ள குடிகளை அடக்கியாளுதல்

பெருஞ் சிரமமான காரியமாகும். அப்படியிருந்தும் சனங்கள் இராசபக்தியுடையவர்களா யிருந்தனர். குடிகளைப் பகைவர்களிடமிருந்து காப்பதே அரசனது முக்கியகடமையாகும். அரசன் குடிகளிடமிருந்து வாங்கிய திறைப்பணத்தைக் கொண்டு ஆலயங்களைக் கட்டுவதும், அவற்றிற்குத் தானம் செய்வதும், பிணியாளருக்கு மருந்துச்சாலைகள் நிருமாணிப்பதும், ஏரிகளை வெட்டுவதும் அரசனது கடமைகளாயிருந்தன.

40. குளங்களை அட்டவணைப்படுத்துக.

| குளங்கள் | கட்டியவர் | காலம் |
|---|---|---|
| பாசவக்குளம் | தெரிந்திலது | முதன்முதல் வெட்டப்பட்டது |
| 11 ஏரிகள் 12 கால்வாய் | வசபன் | கி பி. 127—171 |
| 6 ஏரிகள் | 1-ம் சேட்டதிஸ்ஸன் | கி பி. 323—334 |
| 16 ஏரிகள் 1 கால்வாய் | மகாசேனன் | கி. பி. 334—362 |
| சோபவெவ | 1- உபதிஸ்ஸன் | 5-ம் நூற்றாண்டு |
| கலாவெவ | தாதுசேனன் | கி. பி. 460—478 |
| பல ஏரிகள் | 2-ம் முகலன் | கி. பி. 537—556 |
| குருந்துவெவ | 1-ம் அக்போ | கி. பி. 568—601 |
| அலகமக்கால்வாய் புதுப்பித்தல் கந்தளாய், கிரிதலை | 2-ம் அக்போ | கி பி. 601—611 |

41. சிறு குறிப்பெழுதுக:—(1) தருமருசியர், (2) அஜந்தா. (3) ஜாதகமாலை. (4) சமஸ்கிருதம்.

தருமருசிகர்:—இந்தியாவிலிருந்து வந்த தேரவாதிகளினின்றும்; தருமருசிகர், சாகலிகர் என்னும் இரு பிரிவுகள் தோன்றின. இவர்கள் ஒருவரை ஒருவர் எதிர்த்துப் போட்டியிட்டனர். இவர்கள் சிகிரியா, மிகுந்தலை என்னுமிடங்களிலிருந்த விகாரைகளில் வசித்தனர். இலங்கையிலிருந்து சீனத்துக்குச் சென்ற சிலர் தர்மகுப்தப் பிரிவினராகும்.

அஜந்தா:—சிகிரியா சுவரிலே காணப்படும் சிற்பங்களை அஜந்தாக் குகைகளிலே காணலாம். இது மேற்கிந்தியாவிலே யுள்ளது,

ஜாதகமாலை.—கி. பி. 4-ம் நூற்றாண்டிலே 2-ம் ஆரிய சூரரால் இயற்றப்பட்டது. சந்திரகோமியின் இலக்கணம் இதே காலத்திற்றான் இயற்றப்பட்டது. இவற்றை இலங்கை வாசிகள் கற்றனர்.

ஸமஸ்கிருதம் — இது சிங்களத்திற்குப் பல சொற்களை உதவியது. சிங்களமொழி வளரவும். பொருள் கொள்ளவும், விசாலிக்கவும் செய்தது. மாந்தருக்கு இலக்கணம், யாப்பு, ஒலிநூல், ஜோதிடம். எழுத்தியல், மனக்கலை, அரசியல் என்பனவற்றைப் பற்றியுமான அறிவைக் கொடுத்தது.

42. வைதூலியர் அல்லது மகாயானிகள் என்பவரைப் பற்றி யாது அறிவீர்?

வைதூலியர் என்ற மகாயானப் பிரிவினரும் இலங்கையிலே பெருஞ் செல்வாக்கடைந்திருந்தனர். இது கி. பி.

6-ம் நூற்ருண்டிலே இந்தியாவிலே முக்கியமாய் விளங்கியது. சமயப்பிரசாரகர்கள் தூரதேசங்களுக்குச் சென்று பிரசங்கஞ் செய்து வந்தனர். இதனுலேதான் போதிசத்துவரை வணங்குவது வழக்கமாயிற்று. இவற்றிற்கு உதாரணமாயுள்ளது வலிகமத்திலே காணப்படும் குஷ்டராஜனுடைய சிலையாகும். மகாயானக் கொள்கை பரவியதினுல் சமஸ்கிருதப் பாஷையைப் பலரும் கற்றனர். சில இலக்கியங்கள் சமஸ்கிருத மொழியில் இயற்றப்பட்டன

43 மத்திய காலத்தில் இந்துசமயத்தின் நிலை யாது?

இக்காலத்திலே இலங்கையிலே இந்துசமயமும் பரவலாயின சனங்கள் இந்து தேவதைகளை பூசித்தும் சமய அனுட்டானங்களைக் கைக்கொள்ளவும் தொடங்கினர். அரசரும் பிக்குக்களைப் பரிபாலித்தது போன்று பிராமணர்களையும் பரிபாலித்தனர். மாதோட்டத்திலும், திருக்கோணமலையிலும் சிவாலயங்கள் தாபிக்கப்பட்டன. இதனுலே அவ்விடங்களில் தமிழர் குடியேறினர் இந்துசமயம் பரவியதினுலும் ஸமஸ்கிருத பாஷை விருத்தியடைந்தது. தற்போது கண்டியிலே காணப்படும் மகா தேவாலயமும் இக்காலத்திலே கட்டப்பட்டதெனலாம்.

44. வட இந்தியாவோடு எவ்வாறு இலங்கை முதலிய பிறதேசங்கள் தொடர்பு பெற்றிருந்தன?

கி. பி. 4-ம் நூற்ருண்டிலே சமுத்திர குப்தன் வட இந்தியா முழுவதையும் தன்னுட்சிக்குட்படுத்தினுன். பின் அவன் அதிகாரம் இந்தியா முழுவதினும் பரவியது. ஸ்ரீமேகவர்ணன், புத்தகாயாவுக்குச் செல்லும் யாத்திரிகர் தங்குப்படி ஒரு க்ஷேத்திரம் கட்ட சமுத்திர குப்தனிடம் அனு

மதி கேட்டான். அதற்குச் சமுத்திர குப்தனும் இசைந்தான் என்று அறியக் கிடக்கின்றது.

இதைத்தவிர சமுத்திர குப்தன், பாரசீக, உரோம சீன சக்கரவர்த்திகளோடு தூதுகள் அனுப்பி வந்தனன். பாகியன், ஹியூன் கிசியாங்கு போன்ற சீன யாத்திரிகர் இந்தியாவுக்கும், குமார சீவகர் போன்ற இந்திய ஞானிகள் சீனத்துக்கும் சென்றனர்.

45. **மத்தியகால இலக்கியங்களையும் ஆக்கியோரையும் கூறுக.**

| நூல்கள் | ஆக்கியோன் | காலம் | பாஷை |
|---|---|---|---|
| மகா அர்த்தகதை | பிக்கொருவர் | | சிங்களம் |
| தீபவம்சம் | | | பாளி |
| விசுத்தி மார்க்கம் | புத்தகோஷர் | கி. பி. 409—431 | பாளி |
| மகாவம்சம் | தர்மகீர்த்தி | 6-ம் நூற்றூண்டு | பாளி |
| தம்பியஅநுலகா | | | |
| தயத அல்லது தர் | | கி. பி. 558—501 | சிங்களம் |
| ம அர்த்தகதை | | | ,, |
| சியபாஸ்கரம் | | | ஸமஸ்கிருதம் |
| மகாபாரதம் | | | ,, |
| இராமாயணம் | வால்மீகமுனிவர் | | ,, |
| அர்த்த சாஸ்திரம் | | | ,, |
| ஜானகிஹரணம் | குமாரதாசன் | 5-ம் நூற்றூண்டு | ,, |
| அமிதர்மாவதாரம் | புத்ததத்தன் | | |
| விநயவினிச்சம் | ,, | | பாளி |
| ஐந்திரா | | 3-ம் நூற்றூண்டு | ஸமஸ்கிருதம் |
| தொல்காப்பியம் | தொல்காப்பியர் | | ஸமஸ்கிருதம் |
| குறள் | திருவள்ளுவர் | 5-ம் நூற்றூண்டு | |
| சிலப்பதிகாரம் | இளங்கோவடிகள் | | ஸமஸ்கிருதம் |
| மணிமேகலை | சாத்தனர் | 7-ம் நூர்றூண்டு | |

46. பல்லவரைப்பற்றி விபரித்து எழுதுக.

7-ம் நூற்றுண்டிலே சேர, சோழ, பாண்டிய இராச்சியங்கள் பல்லவர் ஆட்சிக்குட்பட்டன. 6-ம் நூற்றுண்டிலே தட்சிணத்தை ஆண்டவர் பல்லவராவர். இவர்கள் சாளுக்கிய அரசனை புலிகேசியினுல் தென்திசை துரத்தப்பட்டனர். பின்னர் சிம்மவிஷணு என்னும் பல்லவ மன்னன் சேர, சோழ மன்னர்களைத் தோர்க்கடித்து இர்ச்சியம் ஆண்டுவந்தான். பின் 1-ம் மகேந்திரவர்மன் அரசனுனன். இவன் 2-ம் புலிகேசியோடு போரிட்டபடியால் தோல்வியுற்றுன். இதன் பயனுக வேங்கிநாட்டையும், காஞ்சிபுரத்தைபும்மிழந்தனர். பின் திறமை வாய்ந்த நரசிம்மவர்மன் முடிதரித்ததும் இவர்கள் நிலைமை மேலோங்கியது. இவன் 2-ம் புலிகேசியை முறியடித்து பாதாமியைக் கைபபற்றினுன். நரசிங்கவர்மனின் பின் பல்லவராச்சியம் க்ஷீணநிலையடைந்தது பல்லவர் 674-ம் ஆண்டிலே சாளுக்கியரால் தோற்கடிக்கப்பட்டனர். இடைவிடாப் போர்களின்பின் பலலவர் தலையெடுக்கவேயில்லை. சாளுக்கியரும் பலம் குறைந்தனர் சாளுக்கியர் ராஷ்டிரகூடரால் தோற்கடிக்கப்பட்டனர்.

47. சோழருடைய இராச்சியத்தைப்பற்றிக் கூறுக.

சோழருடைய அதிகாரத்தைப் பாண்டியர் அங்கீகரிக்கவில்லை. இதனுலே பராந்தகச் சோழன் பாண்டியர் மீது போர்தொடுத்தான். சிங்கள அரசன் உதவி புரிந்தமையால் சோழர் வெற்றிபெறவில்லை. பின் சோழர் படையெடுத்து வெற்றிபெற்றனர் தோல்வியடைந்த பாண்டியன் சிங்கள மன்னனுன தப்புலவினுடைய உதவியை நாடினுன். இலங்கையிலே உள்நாட்டுப் போர்நடந்தமையால் உதவிபெறுது முடியை இலங்கையிலே வைத்து

விட்டுத் திரும்பினன். பின் 3-ம் உதயன் காலத்திலே பராந்தகன் இலங்கைமீது படையெடுத்தான். இவன் படையை ராஷ்டிரகூட மன்னனான 3-ம் கிருஷ்ணன் தோற்கடித்த படியால் இலங்கையை வெல்லவில்லை. 10-ம் நூற்றாண்டிலே இலங்கைமீதும் படை எடுத்தனர். அப்படியிருந்தும் சிங்களர் தம்மை தற்காத்துக் கொண்டனர். 973ல் ராஷ்டிரகூடர் மேற்சத்திய சாளுக்கிய மன்னனான 2-ம் தைலபனாற் தோற்கடிக்கப்பட்டனர். 1017-ம் ஆண்டிலே 1-ம் இராசேந்திர சோழனால் 5 ம் மிகுந்து சிறையாகப் பிடிக்கப்பட்டான். பின் இலங்கை சோழ ராட்சிக்குட்பட்டது.

48 சீனமும் இலங்கையும் எவ்வகையில் தொடர்புபெற்றிருந்தன?

இலங்கை அந்நியநாடு பலவற்றுடன் சம்பந்தம்பெற்றிருந்தது. அவற்றுள் சீனமும் ஒன்றாகும். இரண்டும் ஒரே பௌத்தசமயத்தை தழுவின. முதலாம் நூற்றாண்டிலே சீன யாத்திரிகர் பலர் புண்ணிய க்ஷேத்திரங்களையும், ஸ்தலங்களையும் தரிசிக்கச் சென்றனர். இவருள் பாகியன் என்பான் கி. மு. 412-ம் ஆண்டிலே இலங்கையை அடைந்து ஈராண்டு தங்கினன். சிங்களவரும் 8-ம் நூற்றாண்டில் சீனத்துக்குத் தூதனுப்பினர். இப்படியாகத் தொடர்புபெற்றிருந்தனவெனலாம்,

49. ஸோராதுஸ்தர் என்பவர் யார்?

முதலில் வியாபாரம் நடத்தியவர் இவர்களின்பின் கிரேக்கர் கைப்பற்றினர். இன்னொருவர் இவர்களை விட இலங்கையோடு வாணிபம் செய்தனர். அவர்கள் பாரசீகராவர். இவர்கள்தான் ஸோராதுஸ்தர் என்பவரைக் குருவாகக் கொண்டவர்.

50. பொல்லனறுவைக் கால மேன் ப்து யாது?

சோழர் வெற்றியடைந்த காலம் தொடக்கம் மாகனுடைய ஆட்சி முடியும் வரையிலும் கூறுவது பொல்லனறுவைக் காலமாகும். கி. பி. 1017—1235.

51. (1017—1070) 11- நூற்றுண்டின் முற்பகுதிவரையிலுள்ள சோழர் நிலைமையைக் கூறுக.

கி. பி. 1017—1070 ஆண்டுகளிலே சோழர் ராஜரட்டை, தட்சிணதேசம் என்பவற்றை ஆண்டனர். இராசேந்திரசோழன் பெருவையும் கலிங்கத்தையும் வென்றும் மலயதீபகற்பம் சுமாத்திரா முதலிய தேசங்களுக்குப் படை அனுப்பினுனே தவிர, உருகுணையைத் தமதாக்க முயற்சி செய்யவில்லை. இவன் மகன் இராசாதிராசன், விக்கிரபாகுவையும், விக்கிரமபாண்டியனையும், வீரசாலமேகனையும் தோற்கடிப்பதாக விருது கூறினுன். பாண்டியரும் சோரும் கலகம் விளைத்தபடியால், மேற்கத்திய சாளுக்கியனை சோமேசுவரன் கி. பி. 1052-ம் ஆண்டிலே முறியடித்தான்.

52. 1-ம் விஜயபாகுவைப்பற்றி யறிந்துகோளற்பாலன யாவை?

1-ம் விஜயபாகுவினுலே சோழர் 1070-ம் ஆண்டிலே இலங்கையினின்றும துரத்தப்பட்டனர். விஜயபாகு முதவில் மலயநாட்டைத் தனதாக்கினுன். 1059ம் கேசதாது காசியப்பனைத் தோற்கடித்து கதிர்காமத்தைப் பிடித்து உறுகுணையின் மன்னனுனுன். பின் வீரராசேந்திரன் என்னும் சோழன்மீது போர் தொடுத்தனன். இவர்களினின்றும் தப்புதற்காக மலயநாட்டினுள் புகுந்தான் சோழர்கள் ராஜரட்டைக்குச் சென்றவுடன் விஜயபாகு தம்பல

காமத்தை இராசதானியாக்கினுன் சோழர் அவ்விடஞ் சென்றபொழுது பளுத்தகிரிக்குப் பின்வாங்கினுன். இவன் சோழனுக்கு எதிராக அனுப்பிய சேனை அனுராதபுரியில் தோற்கடிக்கப்பட்டமையால் வாதகிரிக்குப் பின்வாங்கினுன். அதன்பின்பு கலகம் அடக்கப்பட தம்பலகாமத்திலும், மகாநாக குளத்திலுமிருந்து அரசுபுரிந்தான். சோழ அரசனுன 1ம் குலோத்துங்கன் சாளுக்கியருடனே போரிட்டுக்கொண்டிருக்க, விஜயபாகு அனுராதபுரத்தைப் பிடிக்கப் படைகள் அனுப்பினுன். உடனே அனுராதபுரத்தையும் பொல்லனறுவையையும் கைப்பற்றினுன். விஜயபாகு பொல்லனறுவையைத் தலைநகராக்கி விஜயராசபுரமென்னும் பெயரிட்டனன். 1114-ம் ஆண்டிலே விஜயபாகு ஏக சக்கராதிபத்தியம் செலுத்தினுன். வட பிரதேசத்தில் சோழர் கலகம் விளைத்தனர். இதனையடக்க ஒரு படை அனுப்பினுன். அப்படையானது சோழரால் தோற்கடிக்கப்பட்டது. பின்பு சேனைக்குள் கலகம் ஏற்பட வாகிரிகலைக்கு ஓடிப்போய் பொல்லனறுவையைப் பிடிக்கும் வரையில் வாகிரிகலையில் தங்கினுன்.

53 விஜயபாகுவுக்குப்பின் அரசாண்ட மன்னருள் சிறந்தவர் யார்?

விக்கிரபாகுவுக்கு அரசுரிமை இருந்தது. ஆனுல் மித்திரையின் மகன் மானுபரணன் என்பான் தன் சகோதரர் ஸ்ரீமேகன், ஸ்ரீவல்லபன் என்பாருடன் விக்கிரமபாகுவை எதிர்த்தான். ஆனுல் விக்கிரமவாகு இவர்களை வென்று ராஜரட்டையின் மன்னனுனுன், மானுபரணன் புத்தகாமாவிலிருந்து அரசாண்டான். மற்ற இருவர்களும் உருகுணையைத் தமக்குள் பகிர்ந்தனர். பின்பும் ஒருமுறை மூவரும் எதிர்த்தனர். இதிலே விக்

கிரமபாகு இவர்களை முறியடித்தான். இப்படி யிங்கே கலகம் நடப்பதை யறிந்த வீரதேவன் இலங்கைமீது படையெடுத்தான். இவன் மன்னாரையும் பொல்லனறுவையையும் வென்றானாயினும், கொத்தசாரை என்னுமிடத்தில் விக்கிரமபாகு வீரதேவனைத் தோற்கடித்து ராஜரட்டையை யாண்டான்.

54. 1-ப்பராக்கிரமபாகுவைப்பற்றியறி யற்பாலனயாவை?

இவன் மானாபரணனுடைய புதல்வனாவான். இவன் தன் தகப்பன் இறக்க சிற்றப்பனுடன் வசித்து வந்தான். பின்னர் கீர்த்திஸ்ரீமேகனுடன் இருந்தான். இவன் சிற்றப்பனுடனே சதியாலோசனைசெய்து, சிற்றப்பனுடைய சேனாபதியை படலகொடை என்னுமிடத்தில் தோற்கடித்தான். பின் புத்தகாமாவில், சிற்றப்பனுக்கு ஒத்தாசையாக வந்தவரை முறியடித்தான். ஸ்ரீமேகன் இறந்ததும் தட்சிணதேசத்துக்கு அரசனானான். இலங்கையின் ஒரு பகுதிக்கு மாத்திரம் அரசனாய் இருப்பதுடன் இவன் ஆசைதீரவில்லை. எனவே இவன் ஏற்பாடுகள் செய்து மலயநாட்டை வசப்படுத்தினான். இப்படியாக அனேக யுத்தங்கள் நடத்தி கஜபாகுவுடன் கடைசியில் ஓர் ஒப்பந்தம் செய்துகொண்டான். அதாவது ஒவ்வொருவரும் தம்தம் பகுதியை ஆண்டுவர வேண்டுமென்றும், ஒருவரிறந்தபின்னர் மற்றவர் முழு அரசியலையும் ஆளுதல் வேண்டும். 1153-ம் ஆண்டிலே கஜபாகு இறக்க மானாபரணனும் தமக்கு அரசாளுமுரிமை உண்டென வாதாடினன். பராக்கிரமபாகுவும் மானாபரணனும் யுத்தம் பல இடங்களிற் செய்து கடைசியாக பராக்கிரமவாகு மானாபரணனை முற்றாக அடித்தனன். மானாபரணன் ஓடி உறுகுணையில் வசித்து சிலகாலஞ் சென்றதும் இறந்தான். பராக்

கிரமபாகுவின் ஆதிக்கத்தை சில சிற்றரசர் அங்கீகரிக்க வில்லை. இக்கலகங்களையும் 1160-ம் ஆண்டிலே பராக்கிரமபாகு ஒருவாறு அடக்கினான்.

இவன் 1186-ம் ஆண்டிலே இறந்தான்.

55. சிறு குறிப்பெழுதுக :—(1) நாராயணன், (2) சுகுலை (3) வீரதேவன். (4) அதிகாரி. (5) அந்தரங்க சபை. (6) கதைகள். (7) வாகிரிகலை.

நாராயணன்:—இவன் பராக்கிரமவாகுவின் சேனைத் தலைவனாவான். இவன் ஒருமுறை கலகஞ் செய்தான். இவனையடக்க பராக்கிரமபாகு சேனையின் ஒருபகுதியை அனுப்பினான். இதையறிந்த மானாபரணன் போர்தொடங்கினானாயினும் வெற்றிபெறவில்லை.

சுகுலை:—மானாபரணனின் தாய் 1157-ம் ஆண்டிலே சில குறுநில மன்னருடன் கலகம் செய்தனர். நெடுங்காலம் போர்நடத்தி ஈற்றில் தோல்வி அடைந்தாள்.

வீரதேவன்:—இவன் ஓர் இந்திய வீரன். இவனும் மூன்று சகோதரரும் ஒன்றுகூடி விக்கிரமபாகுவை எதிர்த்ததையறிந்து இலங்கையின்மீது படையெடுத்தான். முதலில் விக்கிரமபாகு மன்னாரிலும், பொல்லனறுவையிலும் வெற்றிபெற்றானாயினும் ஈற்றில் கொத்தசாரை என்னுமிடத்தில் விக்கிரமபாகுவால் முறியடிக்கப்பட்டான்.

அதிகாரி —பொல்லனறுவைக் காலத்தில் ஓர் உத்தியோகம் புதிதாக ஏற்படுத்தப்பட்டது. ஸ்ரீமேகன் இரு அதிகாரிகளை ஏற்படுத்தினான். ஆனால் பராக்கிரமவாகு மூன்று அதிகாரிகளை ஏற்படுத்தினான்.

அரசனது அந்தரங்க சபை:—இச்சபை அரசனுக்கு உதவிபுரிந்து வந்தது. இது இளவரசன், சேனுபதி, பகுதித் தலைவர், வணிகர் என்பவரை அடக்கியுள்ளது.

கதைகள்:—இந் சியாவிலே சேனைகள், யானைப்படை, குதிரைப்படை, காலாட்படை, தேர்ப்படையென வகுக்கப்பட்டிருந்தது. இலங்கையிலே காலாட்படையே உபயோகப்படுத்தப்பட்டது. இவர்கள் பாவித்த ஆயுதங்களாவன: வாட்கள், ஈட்டிகள், வேல்கள், கதைகள் என்னும் பருத்த தடிகளாம்.

வாகிரிகலை:—இலங்கையிலே அநேக மலைக்கோட்டைகள் காணப்பட்டன. இவற்றுள் வாகிரிகலையும் ஒன்றும். தோல்வியடைந்தவர்கள் இக்கோட்டைகளை அடைந்தனர். விஜயபாகுவும் இங்கேதான் பொல்லனறுவை பிடிக்கும் வரையில் தங்கியிருந்தான்.

56. இக்காலத்தில் ஆண்ட ஸ்திரீகளின் பெயர்களைக் கூறுக.

1. மானுபாணன் அன்னையாகிய சகுலை.
2. பராக்கிரமவாகுவின் மனையாளாகிய லீலாவதி.
3. நிஸ்ஸங்கமல்லன் மனையாளாகிய கல்யாணவதி.

என்னும் மூவர் ஆட்சி செய்தார்கள்.

57. இக்காலத்தில் இந்துசமயம் எந்நிலை எய்தியது?

சோழர் இலங்கையை ஆண்டதன் பயனுக பௌத்த சமயம் க்ஷீணநிலை யடைந்தது. இக்காலத்தில் மாந்தருக்கு பௌத்தசமயத்தில் அதிக ஆர்வம் காணப்படவில்லை. மாகன்காலத்திலும் பௌத்த சமயம் உயர்நிலை குறைந்தது. ஏனெனின் மாகன் பௌத்த விக்கிரகங்களை அழித்துச்

சனங்களை இந்துக்களாகும்படி கட்டளையிட்டான். சோழரின் பின் அரசாண்ட பாண்டிய கலிங்க மன்னர் இந்துசமயத்தின் அனுட்டானங்களையும் பழக்க வழக்கங்களையும் கைக்கொண்டு ஒழுகியதோடு இந்து தேவாலயங்களையும் கட்டுவித்தார்கள். சமயக் கட்டுப்பாடுகளையும் இந்து சமயம் அனுசரிக்கச் செய்தது.

58. பொல்லனறுவைக் காலத்தில் இயற்றிய நூல்கள்யாவை?

| நூல்கள் | காலம் | ஆக்கியோன் | பாஷை |
|---|---|---|---|
| அபிதர்மசங்கிரகம் | | | பாளி |
| பாளி இலக்கணம் | | மொக்கலனர் | பாளி |
| வியாகரணத்தை | | சந்திரகோமி | ,, |
| அபிதானப்பதீபி | | | ஸமஸ்கிருதம் |
| அமரகோசம் [சை | | | ,, |
| தாசவம்சம் | | தர்மகீரத்தி | பாளி |
| மகாபோதிவம்சப | | | பாளி |
| சூளவப சய் | | தர்மகீர்த்தி | பாளி |
| அர்த்தசாஸ்திரம் | | கௌடில்யர் | ஸமஸ்கிருதம் |
| அமாவதுரை | | குருலுகோமி | சிங்களம் |
| தர்மப்பிரதீபிகை | | | ,, |
| சசதாவ்தா | 12-ம் நூற்றண்டு | | சிஙகளம் |
| முவதேவதாவ்தா | ,, | | சிங்களம் |

59. சிறு குறிப்பெழுதுக:—(1) பராக்கிரமக் கடல் (2) நிகாயர்கள். (3) தெமலமகாசபை. (4) பொது கல்விகாரை.

பராக்கிரமக்கடல்:—பராக்கிரமபாகு தம்புதுலுவெவ தோபவெவ என்னும் இரு ஏரிகளையும் சேருமாறு இணைத்தபடியால் பராக்கிரமக்கடல் என்னும் பெயர் கொண்ட பெரிய ஏரியை யுண்டாக்கினுன் அதுவுமன்றி அவன் ஆகாயகங்கை போன்ற கால்வாய்களை வெட்டி தோபவெவ, கிரித்தலை, மின்னேரியா, கந்தளாய் ஏரிகளை அம்பன் கங்கையோடு சேர்த்து நீர்பாசன வேலையுண்டாக்கினுன்.

நிகாயர்கள்:—இவர்கள் பௌத்தசமயத்தை ஸ்தாபித்த தேரவாதினிகளில் ஒரு பிரிவினர். இவர்களை உண்டாக்கியவர் 1-ம் பராக்கிரமபாகுவும், நிஸ்ஸங்க மல்லனுமாவர். ஏனுயின் இவர்கள் தகமையற்ற பிக்குக்களை சங்கத்திலிருந்து நிக்க மூன்றும்பிரிவினரான நிராயர்கள் உண்டாயினர்.

தெமலமகாசயை:—சிற்பம் மனக்கலை முதலியவற்றை விருத்தி செய்ய பராக்கிரமபாகு தெமல மகாசயையைக் கட்டுவித்தான் இதற்கணித்தாய் காணப்படும் லங்காதிலகமும், வடதிசையிலிருக்கும் டாகாபவும் பராக்கிரம பாகுவினுல் கட்டப்பட்டது. இதன் சுவர்களில் சீமந்து போன்ற கல்வை பூசப்பட்டிருப்பதால் இவை எவ்வளவு முன்னேற்றமடைந்திருப்பதை கூறுமலே விளங்கலாம். இப்பொழுது இது மண்மேடாகவே காணப்படுகின்றது.

போதுகல்விகாரை:—அலக்கனு என்னுமிடத்தில் உள்ள புத்தவிக்கிரகங்கள் மிகப் பெரியனவாகும் இவ்வுருவங்கள் பொதுகல்விகாரைக்கருகே பாறையிற் செதுக்கப்பட்டிருப்பதை நாம் காணலாம். சிலர் இதனை பராக்கிரம பாகுவின் சிலையெனவும், சிலர் அகஸ்தியரின் சிலையெனவும் கூறுவர்.

60. பொல்லனறுவையை யார் யாது காரணம்பற்றி தலை நகராக்கினர்?

இந்தியாவை அரசாண்ட சோழமன்னர் பன்முறை இலங்கை மீது படையெடுத்து, இலங்கையை அரசாட்சி செய்தனர். பொல்லனறுவையே அதிகமாக இலங்கையின் தலைநகராக விளங்கியது. சோழர், பொல்லனறுவையை சனநாதபுரம் என்னும் மறுநாமத்துடன் அழைத்தனர் இவர்களுக்குப்பின அரசாண்ட 1ம் விஜயபாகுவும், விஷயராசபுரம் என்னும் நாமத்துடன் பொல்லனறுவையை தலைநகராக்கினுன்.

சோழர், பொல்லனறுவை கடற்கரைக்கு அண்மையிலிருந்தபடியாலும், உருகுணையிலிருந்து படைகள் வரக்கூடாத இடத்தில் இருந்தமையாலும், அதைத் தலைநகராக்கினர்.

61. சிங்கள இராச்சியத்தின் (சீரழிவு) காலத்தைக் கூறுக?

(1232—1518) 3-ம் விஜயபாகு காலமுதல் போர்த்துக்கீசர் இலங்கைக்கு வந்தபொழுது அரசாண்ட 8-ம் பராக்கிரமபாகு காலம்வரையிலும் உள்ள சரித்திரத்தைக் கூறுகின்றது.

62. திரிசிங்களமென்றல் என்ன?

இலங்கை இராஜரட்டை, மாயரட்டை, உருகுணை என்ற முப்பிரிவினையுடைத்து. முற்காலத்திலேயிருந்தன போன்று, இலங்கையின் பிரிவுகள் ஒருவித மாறுதலும் அடையவில்லை சில பெயர்கள் மாத்திரம் வேற்றுமையடைந்தன. இதுவே காலத்துக்குக் காலம் மாறிய வேறுபாடாகும்.

63. முன்கூறிய தலைநகரங்களைத் தவிர்த்து வேறு தலைநகரங்களும் உளவோ? அப்படியாயின் அவை யாரால் உண்டாக்கப்பட்டன என்பதைக் கூறுக.

*யாழ்ப்பாணம், பொல்லனறுவை, அனுராதபுரம் போன்ற இடங்களைத் தவிர தம்பதேனியா, யப்பாகு, குருநாகல், கம்பளை, கோட்டைக்காடு, என்னும் ஐந்து தலைகரங்களும் இக்காலத்தில் சிறந்து விளங்கின. முதல் மூன்றும் இயற்கை அரண்களாம். கம்பளையும் குன்றுகளாற் பாதுகாக்கப்பட்டது. கோட்டைக்காடும் சதுப்பு நிலத்தாற் சூழப்பட்டிருந்தது. அரசர்கள் தம் எதிரிகளுக்குப் பயந்து ஒளித்து, தமக்கேற்றவாறு அமைந்த இடங்களை இராசதானியாக்கினர்.*

*தம்பதேனியாவை விஜயபாகுவும், யப்பாகுவை 1-ம் புவனேகபாகுவும், குருநாகலை 2-ம் புவனேகபாகுவும், கம்பளையை 4-ம் புவனேகபாகுவும், கோட்டைக்காட்டை 6-ம் பராக்கிரமபாகுவும் இராசதானியாக்கினர்.*

64. வன்னியரை விபரி?

*தம் சுயேச்சைப்படி நடந்தவர்கள் வன்னியரென்று கூறலாம். இவர்கள் சிங்கள-யாழ்ப்பாண இராச்சியங்களுக்கிடையிலிருந்தனர். தருணத்துக்கு ஏற்றவாறு இரு இராச்சியங்களி லோர் அரசனைத் தலைவனாக அங்கீகரித்துக்கொண்டனர். இவர்கள் 2-ம் பராக்கிரமபாகு 4-ம் விஜபாகு, 1-ம் புவனேகபாகு முதலியோர்களின் ஆட்சிக்குட்பட்டிருந்ததாகத் தெரியவருகின்றது. தமிழர் படையெடுத்தபின்பு அவர்கள் சுயேச்சதிகாரம் செலுத்தினர் என்றும் கூறலாம்.*

65. யாழ்ப்பாண இராச்சியம் எவ்வெப்போது கீழ்பட்டும் சுயேச்சதிகாரம் பெற்றுமிருந்தது?

மாகன்காலத்திலே தமிழ் இராச்சியம் ஏற்பட்டது. 2-ம் பராக்கிரமபாகுவின் காலத்திலே இராஜரட்டை உருகுணை என்பவற்றைத் தமதாக்கினர். 13-ம் நூற்றாண்டிலே இவர்கள் பாண்டிய ராச்சியத்துக்குட்பட்டனராம், 1310-ம் ஆண்டிலே இவர்கள் முன் பறிகொடுத்த பொல்லனறுவையைத் திரும்பப் பெற்றதோடு பாண்டிய ராச்சியத்தினின்றும் விடுதலை பெற்றனர். 1346-ம் ஆண்டிலே அராபிய யாத்திரிகனான இபின்பதூதா இலங்கைக்கு வந்தபோது யாழ்ப்பாண இராச்சியம் வன்மை பெற்றிருந்தது. புத்தளம் வரையில் விசாலித்திருந்தது. பின்பு இவர்கள் தென்திசையிலே தம்மிராச்சியத்தை ஓங்கச் செய்தனரென்றும், திறைபெற்றனர் என்றும் தெரியவருகிறது. இத்திறையை ஒழித்தற்காக அளகேசுவரன் போரிடச் சித்தஞ்செய்து கோட்டைக்காட்டிலும், பாணந்துறையிலும் அரண்களைக் கட்டினான். இவன் தனக்குப் போதிய பலம் இருக்கிறதென்று, திறை இறுப்போனைத் தூக்கி விட்டனன். இதனைக் கேள்வியுற்ற யாழ்ப்பாண அரசனான ஆரியச் சக்கரவர்த்தி, கடல்வழியாகவும், தரைவழியாகவும் தாக்கினான். அப்படியிருந்தும் தமிழர் தோல்வியடைந்தனர். சபுமரல் குமாரையா யாழ்ப்பாணத்தின் மீது படையெடுத்தபோதிலும், அதனைப் பிடிக்க முடியவில்லை. இரண்டாம்முறை வெற்றிபெற்று சிலகாலம் ஆண்டான். பின் கடைசித் தமிழரசனுடைய மருமகனாகிய சங்கிலியனுக்கு அளித்துவிட்டான்.

66. பௌத்த சமயமும் இந்து சமயமும் எப்படி வளர்ந்தன?

(இக்காலத்தில்) அரசாண்ட மன்னர்கள் அஷ்டசீலத்தின்படி ஒழுகுமாறு பிக்குக்களை வற்புறுத்தியும் அவ்வாறு மறுத்தோரை விலக்கியும் வந்தனர். பிக்குணிகளின் சங்கத்தின் தாழ்ந்த நிலைக்கு, அயல்நாட்டுப் படையெழுச்சிகளும் உள்நாட்டுக் கலகங்களும் காரணங்களாயிருந்தன. இப்படியாகப் புத்தசமயம் சீர்திருந்திய காலத்தும் மகாயானக் கொள்கைகள் இலங்கையினின்றும் மறையவில்லை. நாதன் என்னும் அவலோகிதேசுவரரைப் பூசிப்பது முன்னிலும் பிரதானமாகக் கருதப்பட்டது. ஆலயங்களைக்கட்டியும் விக்கிரகங்களைப் பூசித்தும் வந்தனர். சாமன் என்னும் தேவதையும் பூசிக்கப்பட்டு வந்தது.

இந்துசமயமும் வளர்ச்சியடைந்தது. சில அரசர்கள் பிராமணக் குருக்களை ஆதரித்தனர். இந்து தேவாலயங்களும் நிருமாணிக்கப்பட்டன. நூலாசிரியர்கள் கூட தம வணக்கங்களை புத்தர், தர்மம், சங்கம் ஆகிய மூன்றுக்கும் செலுத்தியதோடு பிரமா, சிவன், விஷ்ணு முதலியோருக்கும் செலுத்தினர்.

**67. லங்கா திலக விகாரையும் கடலடேனிய விகாரையும் எதனுல் சிறந்தன?**

லங்கா திலகவிகாரையும் கடலடேனியா விகாரையும் பெருங் கட்டடங்களாயமைந்தன. இவை பொல்லனறுவைக் காலத்தில் நிருமாணிக்கப்பட்ட கட்டடங்களைப் போன்றன. இதனைச் சுற்றி மதிற் சுவர்கள் எழுப்பப்பட்டன. உள்ளே கர்ப்பக்கிருகம் அமைக்கப்பட்டிருந்தது. இவை இரண்டும் கம்பளையிலிருந்து அரசாண்ட 4-ம்புவனேகபாகுவினுல் கட்டப்பட்டன.

**68. தென்னிந்தியர் அல்லது பாண்டியருக்கு இலங்கை எப்படிக் கீழ்ப்பட்டது?**

இந்தியாவிலே சோழருடைய வன்மை குறைய பாண்டியர் கொஞ்சங் கொஞ்சமாக வன்மை பெற்றுவந்தனர். இவர்கள் சோழ இராச்சியத்தின்மீது தம்மதிகாரத்தைப் பெருகச்செய்வாராயினர். இப்படியாகவே இலங்கையும் இவர்கள் கீழ்ப்பட்டதாகத் தெரியவருகிறது மறவர்மன் சுந்தரபாண்டியன் (1020—1230) ஆண்டுகளிற் சோழ மன்னனுன 3-ம் இராசராஜனுடன் யுத்தஞ்செய்து வெற்றிபெற்றதாகத் தெரியவருகிறது. 13-ம் நூற்றுண்டிலே 1-ம் ஜாடாவர்ம சுந்தரபாண்டியன் அதிகமான வெற்றி பெற்றுன். சோழ அரசனை வென்று சோழரை திறை செலுத்துமாறு செய்தான். இவன் இலங்கைமீது படையெடுத்து இலங்கை அரசனை திறைசெலுத்துமாறு செய்வதாக விருது கூறினுன். இவனுக்குப்பின் முடிசூடிய 2-ம் ஜடாவர்மன் இலங்கையின்மீது (1254—56) ஆண்டுகளிலே படையெடுத்தான். இலங்கையில் ஓராசனைக் கொன்று இன்னெரு அரசனைக் கப்பங் கட்டவும் செய்தான். முதலாம் அரசன் யாழ்ப்பாண அரசனுகவும், இரண்டாம் அரசன் 2-ம் பராக்கிரமபாகுவாயு மிருக்கலாம். மறவர் மகுலசேகரன் என்னும் இன்னொருவன் இலங்கையின்மீது (1268—1311) ஆண்டுகளிற் படையெடுத்தான், ஆனுல் தோற்கடிக்கப்பட்டான். பின்பு அவன் மந்திரியான ஆரியச் சக்கரவர்த்தி யப்பாகுவைக் கைப்பற்றி தலதாவை எடுத்துச் சென்றுன். இருபது ஆண்டுகளுக்கு இலங்கை பாண்டியரால் ஆளப்பட்டுவந்தது

69. எப்படி விஜயநகர இராச்சியம் 12-ம் 16-ம் நூற்றுண்டுகளில் இருந்தது?

2-ம் ஹரிஹரன் என்னும் விஜயநகர வேந்தன் மகன் வீருபாட்சன் என்பான் இலங்கையை வென்றதாகக் கூறி

ஞன். 2-ம் தேவராயன் ஆண்டகாலத்தில் யாழ்ப்பாணம் அவன் கீழ்ப்பட்டமையால் விருட்சன் யாழ்ப்பாணத்தை வென்றிருப்பான். 2-ம் தேவராயன் இலங்கையின் மீது படையெடுத்தான். இவன் மரணமும் பின் ஏற்பட்ட குழப்பமும், சபுமால் குமாரையன் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றவும், கறுவாப்பட்டையுடன் சென்ற கப்பலைப் பிடிக்கவும் முடிந்தது. 1565-ம் ஆண்டுவரையில் விஜய நகரராச்சியம் சிறப்புடன் விளங்கியது.

70. சந்திரபானு யார்? இலங்கையை அடைந்த காரணம் யாது?

மலாய்நாட்டு, பக்தன் விரிகுடாவிலுள்ள தம்பிரலிங்க நாட்டரசனுவான். இவன் இருமுறை இலங்கையின்மீது படையெடுத்தான் இவன் 1244-ம் ஆண்டிலே முதன் முறை 2-ம் பராக்கிரமபாகுவின் காலத்திலே புத்த விக்கிரகம் ஒன்றை அபகரிக்கவே வந்தான். ஆனுல் வெற்றி பெறவில்லை. பாண்டிய சோழப் படையெழுச்சிகளுடன் மீண்டும் இலங்கைக்கு வந்து தலதாவும் புத்தாது பிச்சைப்பாத்திரம் ஒப்புவிக்கப்படவேண்டுமெனக் கூறினுன். அப்பொழுதும் அவன் வீரபாகுவினுல் தோற்கடிக்கப்பட்டான்.

71. இலங்கை எவ்வெவ் தேசங்களோடு வியாபாரத்திலும் சமயத்திலும் தொடர்பு பெற்றது?

சீனர் பன்முறை இலங்கைமீது படை எடுத்தும் தலதாவைப் பெறவில்லை. சிங்கே என்பவன் தலதாவைப் பெறும்படி இலங்கைக்கு வந்து தோல்வியடைந்தான். பின் 1408 லே வந்து அரசனையும் தேவியையும் உத்தியோகத்தர்களையும் சிறைபிடித்துச் சென்ருன். 1459-ம்

ஆண்டுவரையில் இலங்கை சீனத்துக்குத் திறை செலுத்தியது.

ஜேர்மன், எகிப்து, பெகு என்பன வியாபாரத்திலே தொடர்புபெற்றிருந்தன. 1283-ம் ஆண்டிலே எகிப்துநாடு நவரத்தினங்களேயும், யானைகளேயும் ஏற்றுமதி செய்தது. பர்மா சமயவிஷயமாகத் தொடர்பு பெற்றது. தர்மசேதி என்பவன் 22 பிக்குக்களே பிக்கு தீட்சை பெறுதற்பொருட்டு அனுப்பினன். ஜேமனுக்கும் இலங்கைக்கும் ஏற்பட்ட தொடர்பு, இலங்கையிலே அனேக முஸ்லிம்கள் தங்குதற்குக் காரணமாயிற்று.

72. 16-ம் நூற்றுண்டு தொடக்கமாக இலங்கை எப்படி அன்னியர் கீழ்ப்பட்டிருந்தது. பலன் யாவை?

இலங்கை க்ஷீணதசை யடையத் தொடங்கவே பாண்டியருக்குப் பதிலாகப் போர்த்துக்கீசர் வந்து சிங்களரை மலயநாட்டிற்கு அனுப்பி யாழ்ப்பாணத்தை வெற்றி பெற்று அரசாண்டனர். பின்பு ஒல்லாந்தர் கடற்கரைப் பிரதேசங்களைக் கைப்பற்றினர். பின்னர் ஆங்கிலேயர் இவர்களிடமிருந்து பெற்றனர். பின்பு இலங்கையர் நாகரீகத்திற்குமேல் நாட்டையே முன்மாதிரியாகக் கொண்டனர். கிறீஸ்த சமயமும் வேரூன்றியது. இவர்களே நம் முன்னேற்றத்திற்கு அடிகோலியவர் எனலாம். சரித்திரமும் புதிய வழியே செல்லத் தொடங்கிற்று. ஆங்கிலம் பொதுப்பாஷையாகவே வந்தது. மாந்தர் வியாபாரத்தையும், கமத்தொழிலேயும், அரச சேவையையும் தம் முயற்சியாகக் கொண்டனர். புகையிரதம், மோட்டோர், தந்தி என்பனவற்றின் பிரயோசனத்தை மாந்தர் அறிந்தனர். எனவே இவர்கள் காலத்துக்கு ஏற்றவாறு நடந்தனரெனலாம்.

72. மகா வம்சம் என்றால் என்ன?

இலங்கையின் சரித்திரத்தை அறிய மகாவம்சமே பெரிதும் உதவியது. இது இரு பிரிவினை யுடைத்து. 1-ம்பகுதி கி பி. 6-ம் நூற்றாண்டிலே அனுராதபுரத்திலே மாகாவிகாரையிலே பௌத்த பிக்கு ஒருவரால் எழுதப் பட்டது. 2-ம் பகுதியைச் சூள வம்சம் என்பர். இது முப்பிரிவினையுடைத்து. முதற்பிரிவு தர்மகீர்த்தி என்னும் பிக்கினால் 13-ம் நூற்றாண்டளவில் பொல்லனறுவையிலியற் றப்பட்டது. இரண்டாம் பிரிவை யார் எக்காலத்தில் இயற்றினர் என்பது தெரிந்திலது. 18-ம் நூற்றாண்டள வில் பௌத்த பிக்கான திபேரத்துவாவசுமங்கலாவர் எனவே மகாவம்சம் ஆதிகாலம் தொடக்கம் ஆங்கிலே யர் இலங்கையை வென்ற காலம் வரையிலுமுள்ள சரித் திரத்தைக் கூறுகின்றது.

74. சிறு குறிப்பெழுதுக—(1) அர்த்தகதை. (2) ஓல் டன்பர்கனர். (3) குவைறேசு. (4) துசிதிதீசு.

அர்த்தகதை:—இது ஓர் சிங்கள நூலாகும். இது சரித்திர சம்பந்தமான பாரம்பரைக் கதைகளை உணர்த்து கின்றது. மகாவம்சத்தின் முதற்பகுதி விஷயங்களுக்கு இது ஆதாரமாயுள்ளது.

ஓல்டார்பர்கனர்.—இவர் ஓர் ஜெர்மனியப் பேராசிரி யாராவர். இவர் மகிந்தனின் பிறப்பு வளர்ப்பு முதலிய வற்றை ஆராய்ந்து இலங்கைவாசிகள் எண்ணுவது வெறுங் கட்டுக்கதையென நிலையுறுத்தினர்.

குவைறோசு:—இவர் போர்த்துக்கீச நூலாசிரியரா வர். இவர் இலங்கையின் ஆத்மீய லௌகீக வெற்றி என் னும் நூலை இயற்றினார்.

துசிதிதீசு:—இவர் கிரேக்க நூலாசிரியராவர். இவ ரியற்றிய நூல் 'பெலொப் பொனிசியப்பேரர்' என்பதாம்

75. சூளவம்சத்தின் முதற்பகுதி கூறுவதென்ன?

சூளவம்சத்தின் முதறபகுதி பெரும்பாலும் ஆலய நிருமாணம் முதலிய நற்கருமங்களையும், சரித்திர வழி யிலே பயன்படாவிடினும் மாந்தர்க்கு அறிவூட்டக்கூடிய கட்டுக்கதைகளையும் அடக்கியுளது இதன் அம்சங்கள் யாவும் உண்மையானவை? எனெனில் இதைப்பற்றின சான்றுகள் இலங்கையிலும் இந்தியாவிலும் உள்ள கற் சாசனங்களிற் காணப்படுகின்றன. இதில் 1-ம் விக்கிரம பாகுவின் ஆட்சி வெகு விரிவாகக் கூறப்படுகின்றது. சூளவம்சம் காப்பியமுறையிலே இயற்றப்பட்டது.

76. இச்சரித்திரத்தை வரைய உதவிய நூல்கள் யாவை?

நம் சரித்திர நூலாசிரியரான மெண்டிஸ் அவர்களுக்கு ஊன்று உதவியாய் விளங்கியது மகாவம்சமாகும். ஆனல் வேறு சில நூல்களும் சில விஷயங்களைக் கூறுவதற்கு ஆதாரமாயுள்ளது. அவை: நிலநூலறிஞர், சீவநூல்றிஞர், மானிட சரீர வளர்ச்சி நூலறிஞர், இதிகாசச் சிற்பநூலா சிரியர் என்போரியற்றிய நூல்களிலிருந்து விஷயங்களும் தொகுக்கப்பட்டன. இச்சரித்திரத்தின் பிற்பகுதியை இயற்ற மகாபோதி வம்சம், பூஜாவலியம்., நிகாயசங்கிர கம் என்பன. சில விஷயங்களை உறுதிப்படுத்துவதோடு மேலதிகமான விஷயங்களையும் தெரிவித்தன. சீன யாத் திரிகரான பாஹியன். அராபிய யாத்திரிகரான இபின்பதூ தா என்போர் வரைந்துள்ள விருத்தாந்தங்களும் உள.

77. மானிட பருவங்களை வரைக:—

மானிடப் பருவமானது, வேட்டையாடும் பருவம், மாடுமேய்க்கும் பருவம், கிருஷிகப் பாவம், வாணிபப்பருவம், கைத்தொழில் பருவம் எனப் பிரிக்கப்பட்டிருந்தன. முதன்முதல் மானிடர் வேட்டையாடும் பருவத்திலிருந்ததற்கு இக்காலத்து வேடர்களே சான்றுகளாவர். பின்னர்வந்த ஆரியர் கிருஷிகப் பருவத்தையும் போர்த்துக்கேயரும், ஒல்லாந்தரும் வாணிபப் பருவத்தையும் ஏற்படுத்தினர். பிரிட்டிஷார் வந்தபின்னர் இலங்கை கைத்தொழிற்பருவத்தை அடைந்ததெனலாம்.

78. இலங்கை உலகத்திலே மத்திய ஸ்தானமாயிருக்கிறது என்பதற்கு என்ன சான்றுகள் தருவாய்?

இலங்கையானது இந்துசமுத்திரத்திலே இந்தியாவுக்கு அண்மையிலே இருக்கின்றது. மேற்றிசை ஐரோப்பிய நாடுகளிலிருந்து, கீழ்த்திசையிலுள்ள சீனம், சீயம், யப்பான், சாவகம், சுமாத்திரா ஆஸ்திரேலியா முதலிய நாடுகளுக்குக் கப்பல்கள் செல்லும் பாதையிலே மத்தியதானமாக இருத்தல் ஆகியன முக்கிய சான்றுகளாகும். இலங்கையின் இயற்கை அமைப்பும் நிலத்தின் செழுமையும் வியக்கத்தக்கது. அன்னியர்கள் கடற்கரையோரத்திலே மலைத்தொடரொன்றும் இல்லாமையினாலே சுலபமாகக் குடியேறினர். இங்கு நதிகளிருப்பதால் கிருஷிகத்திற்கு ஏற்ற வசதிகளை அளிக்கின்றன.

79. இலங்கையின் முற்கால தற்கால நிலைமையை விபரி.

முற்காலத்தில் இந்தியாவிலிருந்து இரு பிரதான சமயங்களான பௌத்த சமயமும் இந்து சமயமும் கொண்டுவரப்பட்டன. நூல்கள் பாளிமொழியிலும் சமஸ்கிருத

மொழியிலும் எழுதப்பட்டிருந்தன. இத் தீவிற் காணப் படும் சிற்பம் மனக்கலையாவும் இந்தியாவிலிருந்தே வந்தன. இலங்கையிலிருந்து யானை, வாசனைத் திரவியம் முதலா னவை ஏற்றுமதியாயின. நெல் முதலாக ஏற்றுமதிசெய் யப்பட்டது. பண்டைக்காலத்தில் இதன் செல்வாக்கை யாவரும் வியப்பர்.

ஆனால் தற்காலத்தில் நம் இலங்கை எல்லாவிதமான சாமான்களையும் இறக்குமதி செய்கின்றது, நெல், அரிசி முதலானவை இந்தியாவிலிருந்தே வருகின்றன. சீலைகள் புஸ்தகங்கள் நம் தினதேவைக்கு வேண்டிய பலவகைப் பொருட்களும் பிற இடங்களிலிருந்தே வருகின்றன. தற் காலத்தில் பௌத்தசமயம், இந்து சமயம். கிறிஸ்து சமயம முதலான எல்லாச் சமயங்களும் வேரூன்றி நிலைத்து வரு கின்றன ஆங்கிலம் சர்வசாதாரணமாய் யாவராலும் பேசப் பட்டு வருகின்றது. மேலைத்தேச உடைகளும், பழக்கவழக் கங்களும் நம்மை ஓர் அளவுக்குச் சீர்திருத்தி விட்டன. தற்காலத்தில் ஆண் பெண் இருபாலார்களும் தம் தாய்ப் பாஷையைக் கற்பதோடு திருப்தி அடையாது ஆங்கில மும் கற்றுவருகின்றனர். 18-ம் நூற்றாண்டு தொடக்கம் இற்றைவரையும் இலங்கை ஆங்கிலேயரால் ஆளப்பட்டு வருகின்றது.

80 இலக்கியங்களையும் அவற்றின் விசேஷங்களையுங் கூறுக?

| இலக்கியங்கள் | விசேஷம் |
| --- | --- |
| 1. ஹத்தவன கல்லவிகார வம்சம் | சரித்திர நூல் (ஸ்ரீசங்கபோவின்) |
| 2. சத்தர்ம சங்கிரகம் | பௌத்தசமய சரித்திர நூல் |
| 3. ரசவாகினி | 103 கதைகள்கொண்ட வம்சநூல் |
| 4. ஜினசரிதம் | சிவஞளிபாதத்தைக் கூறுவது |
| 5. ஜினலங்காரம் | ,, ,, |
| 6. பைஷஜ்யமஞ்ஜூஷா | வைத்திய நூல் |
| 7. தாதா பூஜாவளி | தாக வம்சத்தை முதன் நூலாகக் கொண்டது |
| 8. அத்தனகலு வம்சம் | ரசவாகினியை மூலமாகக்கொண்டது |
| 9 காபோதி வம்சம் | ,, ,, |
| 10. சத்தர்மாலங்காரம் | ,, ,, |

| இலக்கியங்கள் | விசேஷம் |
|---|---|
| 11. நிகாய சங்கிரகம் | பௌத்த சமய வரலாற்றைக் கூறுவது |
| 12. கவிசிலுமினு, குசதாவதா | குசசாலத்துக் கதையைக் கூறுவது |
| 13. காவியசேகரம் | ஸ்ரீராகுலம் இயற்றியது |
| 14. குட்டில காவியம் | செய்யுள் நடையிலுள்ளது |
| 15. தலதா சரிதம் | தந்தசேஷத்தைக் கூறுவது |
| 16. லோகோபகாரயம் | நீதிக்கதைகள் அடங்கியது |
| 17. புத்தகுணலங்காரியம் | புத்தரையும் உபதேசங்களையும் கூறுவது |
| 18. லோவாதசங்கார வம்சம் | புத்தருபதேசங்களை வற்புறுத்துவது |
| 19. சித்தசங்காரவம் | சிங்கள இலக்கண நூல் |
| 20. இராவணமாலை | ஓர் நிகண்டு (பிரியும்மாலை, நாமவளி) |
| 21. யோகார்ணவம் | வைத்திய நூல் |
| 22. யோகரத்னகாம் | ,, ,, |
| 23. சந்தேசம் | புதுமுறைச் செய்யுள் |
| 24. மேகதூதம் | காளிதாசனியற்றியது |

# பரீட்சை வினுக்கள்.

## பயிற்சி I. A.

1. ஆதியில் வேடர் இலங்கையில் எவ்வுலோக காலப் பகுதியில் சீவித்தனரென்பதற்கு நீர் கண்ட உண்மைகள் எவை?

2. பண்டாரமுறை என்பது என்ன? இம்முறையிலிருந்து தோன்றியது என்ன?

3. ரிக் வேதம் என்பதைப்பற்றி யாது அறிவீர்?

4. ஆரியரின் தொழில் யாது?

5. ஆரியர் இலங்கையிற் குடியேறிய சான்றுகள் எங்ஙனம் அறியப்படுகின்றன?

6. ஆரியரின் சீவியம் சுகசீவியம் என்பதெப்படி?

7. உவில்லியம் யோன்சு என்பவர் யார்?

8. பண்டைக்கால சாதியினரின் பெயர்கள் எவற்றை விளக்குகின்றன?

9. இலங்கையிலிருந்த அரச வம்சங்கள் யாவை?

## B.

10. மொழிக்கும் சாதிக்கும் தொடர்பின்று என்பதற்குப் போதிய சான்றுகள் தருக.

11. "தோவலர்க்கும் வேடர்க்கும் சம்பந்தமுண்டு" இவ்வாக்கியத்தை அத்தாட்சிப்படுத்துக?

12. இலங்கையின் கிருஷித் தொழிலுக்கும் ஆரியருக்குமுள்ள தொடர்பை விளக்குக.

## பயிற்சி II. A.

1. திராவிடர் இலங்கைக்கு எப்படி வந்தனர்?

2. திராவிடர் யார்?

3. கி. பி. 6-ம் 7-ம் நூற்றாண்டுகளின் விசேஷம் யாது?

4. திராவிடரின் ஆதிக்கம் எவற்றால் விருத்தியடைந்தது?

5. அஷ்டசீலங்களாவன யாவை? இவைகளை அனுட்டிப்பதனால் நன்மைகள் யாவை?

6. பண்டைய ஆரியரின் சமயம் யாது?

7. பிரதிமைகள் இல்லாக் காலங்களில் புத்தரைப் பூசித்து வந்தமை எவ்வாறு?

8. போதிசத்துவர் என்பவர் எப்படிப்பட்டவர்?

## B.

9. பௌத்த சமயம் முதன்முதல் எங்கு தோன்றியதென்பதையும், எவ்வாறு இலங்கையில் பரவியதென்பதையும் விளக்குக?

10. திரிபீடகம் யாது? அதன் பகுதிகளையும், அவை கூறும் விஷயங்களையும் தருக?

11. பண்டைய சிங்கள வரிவடிவம், அல்லது பௌத்த சமயத்தினால் இலங்கைக்கேற்பட்ட நன்மைகள் என்பதைப்பற்றிச் சிறு கட்டுரை ஒன்று வரைக?

12. புராதன எழுத்து முறையைப்பற்றி யாது அறிவீர்?

## பயிற்சி III. A.

1. பூர்வ குடியேற்றத் (பண்டைக்காலப் பகுதியில்) சாபனங்கள் மூன்று கூறுக?

2. அனுராதபுரத்தின் முதன்மைக்குக் காரணம் என்ன?

3. களனி, மகியங்கனு, கச்சகத்திடர், என்பவற்றைப் பற்றிச் சரித்திர சம்பந்தமாக ஒவ்வோர் வாக்கியங்கள் கூறுக?

4. மலைநாடு பிரபல குடியேற்றத் தானமாக இருந்தமைக்குக் காரணம் கூறுக?

5. அரசியற் சரித்திரம் பற்றி மாகமா ஏன் விசேடமுடைத்து?

6. எலாளன், விஷயகுமாரன், துட்டகெமுனு, வசபன் என்பவரைக் கால அட்டவணைப் படுத்தி எழுதுக:

7. பண்டைக்காலப் பகுதியிலாண்ட மன்னர் தங் குடிகளுக்காகப் புரிந்தன எவை?

8. கிருஷிப் பகுதியில் அரசர்கள் எடுத்த முயற்சிகளெவை?

9. அபயவெவ, எறுவெவ, கவுதுலுவெவ, மின்னேரியா என்பவற்றை வெட்டுவித்தோர் யாவர்?

10. மகாசேனன் செய்தவை யாவை?

## B.

11. பௌத்த சமயம் பரவியுள்ள காலத்தில் வேறு யாருடைய சமயம் பரவியது?

12. பௌத்த சமயக் குருமாரின் பற்பல பிரிவினைகளேயும் அவ்வாறு மாறுபட்டமைக்குக் காரணங்களேயுங்கூறுக?

## பயிற்சி IV. A.

1. மகாவிகாரை, அபயகிரி விகாரை, ஜேவதனுராமா என்பன யாரால் கட்டப்பட்டன?

2. சாஞ்சியிலுள்ள டாகபவைப் போன்ற பிரசித்தி பெற்ற டாகப (இலங்கையில்) எதென்று கூறுக?

3. அனுராதபுரத்து அரண் யாரால் கட்டப்பட்டது?

4. ஆந்திரர் யார்?

5. ஆந்திரர் பௌத்த சமயிகள் என்பது எவ்வத்தாட்சிகளால் தெரியப்படும்;

6. நாகார்ச்சுனன் யார்?

## B.

7. தென்னிந்திய மூன்று முக்கிய பாகங்களையும் படங்கீறிக் குறிக்க?

8. தென்னிந்தியாவோடு எந்நாடுகள் வியாபாரஞ்செய்தனவென்றும், அவ்வாறு நடந்தமைக்குச் சான்றுகளும் தருக?

9. கி. பி. 1-ம் 2-ம் நூற்றாண்டுகளில் இலங்கைக்கிட்டநாமங்களையும், பெரிப்புளுசு என்ன? என்ன விஷயம் கூறுகின்றதென்பதைப் பற்றியும் விரிவாகக் கூறுக?

10. பண்டைக்காலப் பகுதியில் நடைபெற்ற பிரதான விஷயங்களையும், விசேஷித்த அரசர்களையும் கூறுக?

## பயிற்சி V A.

1. மத்தியகால முதற்பகுதியின் கால எல்லை கூறுக?

2. சிகிரியா யாரால் இராசதானியாக்கப்பட்டது? காரணம் என்ன?

3. நுவரைலட்டன் யார்?

4. 5-ம் சேனன் காலவிசேடம் யாது?

5. மாணியமுறை இலங்கையிலே எக்காலப் பகுதியில் வழங்கியது.

6. மகாதிபாதன் யார்?

7. மத்தியகால முதற்பகுதியிலாண்ட மன்னரின் கடமைகளாயிருந்தன எவை?

8. குருந்துவெவ, யாரால் எப்போது வெட்டப்பட்டது?

B.

9. மத்தியகால முதற்பகுதியின் அரசியல் முறையிலே மிக விசேஷமாகக் கவனித்தற்குரிய விஷயம் யாது? அதைப்பற்றி விரிவாகக் கூறுக?

10. காசியப்பன், அக்போ என்னும் பெயர்களைப்பற்றிப் பௌத்த சமயத்தைக்கொண்டு என்ன அறிவாய்?

11. வைதூலிய சமயம் புத்தசமயத்தின் எப்பிரிவினரது சமயமாகும்?

12. கி. பி. 6-ம் நூற்றாண்டில் இந்தியாவில் மிக முக்கியமாய் விளங்கியது எது?

பயிற்சி VI. A.

1, மகாயானிகளின் உலக ரட்சகர் யார்?

2. ஜாதகமாலை, போதிசரியாவதாரம் என்பன யாரால் இயற்றப்பட்டன.

3· ஸமஸ்கிருத மொழிப்பயிற்சியினால் பலாபலன்களாவன யாவை?

4. கி. பி. 790 ல் இந்தியாவில் நடந்த விசேஷம் யாது?

5, சிகிரியா எப்போ மலைக்கோட்டையாக்கப்பட்டது?

6. மகா அர்த்தகதை என்பது யாது?

7. விசுத்திமார்க்கம், மகா வம்சம் என்பனவற்றைப் பற்றி நீர் அறிவன யாவை?

8. தம்பிய அதுவகாதபத என்னும் நூலின் மறுநாமம் யாது?

## B.

9. புத்ததத்தன் இயற்றிய நூல்களையும் அவை கூறும் விஷயங்களையுந் தருக?

10. செங்குட்டுவன், கரிகாலன், கஜபாகு, 2-ம்நெடுஞ் சேழியன், காரம், திருக்குறள் என்பனவற்றைக் கால அட்டவணைப்படுத்துக?

11 மேலைச் சாளுக்கியர், கீழைச் சாளுக்கியர் என்பவரைத் திட்டமான குறிப்புகளுடன் விளக்குக?

12. பல்லவ ராதிக்கத்தைப்பற்றிய குறிப்புகள் வரைக?

## பயிற்சி VII. A.

1. மகாபலிபுரம், நாளந்தா என்பன யாவை?

2. 5-ம் காசியப்பன், தப்புலன், 4-ம் மிகுந்து, 2-ம் தைலபன் இவர் சீவித்த நூற்றாண்டுகளைத் தருக?

3. பொல்லனறுவைக்குச் சனநாதபுரம் என நாமஞ் சூட்டியதெப்போ?

4. பாகியன், குமாரசீலர் என்போரைப் பற்றி யாது அறிவீர்?

5. சீனத்திலாண்டுவந்த வம்சங்கள் மூன்றின் பெயர் கூறுக?

## B.

6. பைசாந்தியம் என்பதன் மறுநாமம் யாது?

7. இலங்கையோடு வியாபாரஞ்செய்த மேனாட்டினர் நாமஞ் சில கூறுக?

8. ஸோராஜஸ்தர் யார்?

9. காலிப்புகளின் குருமார் யார்?

## பயிற்சி VIII. A.

1. சட்டத்தாபகன் யார்? அவன் ஞாபகார்த்தமாக ஒல்லாந்தரால் இலங்கைக்குக் கொண்டுவரப்பட்டது எது?

2. பொல்லனறுவையைத் தலைநகராக்கியமைக்கு உதாரணங் கூறுக?

3. வல்லப மதனராசனைத் தோற்கடித்தது யார்?

4. உறுகுணையின் தலைநகரங்கள் சில கூறுக?

5. விஜயபாகுவினால் ஆக்கப்பட்ட இராசதானிகள் எவை?

6. விஜயபாகு சோழரைத் துரத்துவதற்காகச் சேனைகளை விடுத்த பாதைகளைக் கூறுக?

7. வேலைக்காரர் என்னும் படைவகுப்பினர் யாவர்?

8. விக்கிரமபாகு காலத்தில் படையெடுத்த இந்திய வீரர் யார்?

## B.

9. விஜயபாகுவின் பிந்திய மன்னரின் வம்சவிருட்சம் தயாரிக்க?

10. 1-ம் பராக்கிரமபாகு அரசியல் முறையில் ஏற்படுத்திய திருத்தங்கள் எவை?

11. 1-ம் பராக்கிரமபாகு செய்த நன்மைகளை விளக்கி அவன் பிரதானமானவன் என்பதைக் காட்டுக?

12. பராக்கிரமபாகுவுக்கும் கஜபாகுவுக்கும் நடந்தபோரில் பராக்கிரமபாகு அனுப்பிய சேனை சென்ற பாதையைப் படங்கீறிக் குறிக்க?

## பயிற்சி IX. A.

1. 2-ம் பராக்கிரமபாகு, 6-ம் பராக்கிரமபாகு என்போர் செய்த செயல்கள் யாவை?

2 திரிசிங்களம் என்ன? யாவை?

3. பொல்லனறுவை யாரால் இராசதானியாக்கப்பட்டது

4. தம்பதேனியா, யப்பாகு, குருநாகல், கம்பளை, கோட்டைக்காடு என்பனவற்றின் விசேஷத் திறமைகட்குக் காரணங் கூறுக?

5. ஷை இராசதானிகளை ஸ்தாபித்தோர் யார்?

6. வன்னியர் யார்?

7. கலிங்கமாகன் காலத்திருந்த சிங்கள அரசன் யார்?

8. இபின்பதூதா எவ்வாண்டில் இலங்கைக்குவந்தனன்?

B.

9. சபுமால் குமாரையா, 6.ம்பராக்கிரபாகு, நிஸ்ஸங்க அளகக்கொன்னுரன் என்போர் எந்நூற்ருண்டில் சீவித்தனர்?

10. 13-ம், 14-ம், 15-ம் நூற்ருண்டுகளில் இந்துசமய வளர்ச்சியைப்பற்றிக் கூறுக?

11. லங்கா திலகம் எங்குள்ளது? யாரால் கட்டுவிக்கப்பட்டது?

பயிற்சி X.

1. கவிசிலுமிஞ, என்பது என்ன? யாரால் இயற்றப்பட்டது?

2. 14-ம் நூற்ருண்டில் இயற்றப்பட்ட சிங்கள இலக்கண நூல் யாது?

3. 1310ல் விசேஷம் என்ன?

4. 1244, 6-ம் விஜயபாகு காலம் என்பவற்றில் இலங்கைக்கு வந்தோர் யாவர்?

5. இலங்கை பிறநாடுகளுடன் வியாபாரஞ் செய்தமையைப்பற்றி ஒரு சிறு கட்டுரை தருக?

| பிழை | பக்கம் | திருத்தம் |
|---|---|---|
| இலங்கைக்குவந்தது | 1 | இலங்கைக்கு விலங்குகள் வந்தது |
| கிருஷத் | 4 | கிருஷித் |
| யாழ்ப்பாணத்து | 6 | தென் பகுதி |
| பரவினர் | 7 | பரப்பினர் |
| திரிபீடம் | 7 | திரிபீடகம |
| பிராமணங்கள் | 7 | பிராம்மணங்கள் |
| இந்தியாவிருந்தே | 14 | இந்தியாவிலிருந்தே |
| மன்னது | 14 | மன்னனது |
| வடபிரதேசம் | 17 | தென்பிரதேசம் |
| அரசன் | 18 | அரசனின் |
| மகாயானிகன் | 20 | மாகாயானிகள் |
| கிசியாங்கு | 22 | திசியாங்கு |
| மகாவம்சம் | 22 | சூளவம்சம் |
| கி. பி. 558-501 | 22 | கி. பி. 568-601 |
| காஞ்சிபுரத்தையுமிழந்தனர் | 23 | காஞ்சிபுரத்தையுமிழந்தனர் |
| டுஸாராதுஸ்ரர் | 24 | பாரசீகர் |
| 1059ம் | 25 | 1059ம் ஆண்டிலே |
| இவன் தன் | 27 | இவன் தன் |
| அடைந்தான் | 28 | அடைந்தாள் |
| தலைகரங்களும் | 33 | தலைநகரங்களும் |
| கிங்கள-யாழப்பாண | 33 | சிங்கள-யாழ்ப்பாண |
| பிடிங்கவும் | 37 | பிடிக்கவும் |
| சிங்கே | 37 | சிங்கோ |
| முஸ்லிமகள் | 38 | முஸ்லீம்கள் |
| ஆங்கிலேயம் | 39 | ஆங்கிலேயர் |
| கிருஷிகப் | 41 | கிருஷிகப் |